20 காசு

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



புதுவையில் மலர்ந்த புதுமை!

—அரிமதி-தென்னகன்—

முலடிவயிற்று மகன் போல, புதுவை மண்ணில் புதுமை மலர்ந்துள்ளதை நாடறியும். மலர்ந்துள்ள புதுமை, மக்களின் மனத்தகத்து மகிழ்வையும், இன்பத்தையும், எதிர்கால — நம்பிக்கையையும் அளித்துள்ளதாக ஆன்றோரும், சான்றோரும் கூறிக்களிப்பதும் உண்மை.

ஆனால்.........

இந்தப் புதுமையின் மலர்ச்சிக்குப் பின் மறைந்துள்ள உண்மைகளை நாடறிந்துள்ளதா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இந்நிலைக்குக் காரணம் சிலபல நாளேடுகள் கட்டிவிட்டக் கதைதான் என்பதை நினைக்கும்போது 'பத்திரிகா தருமம்' என்பது இதுதானா என்ற வினா நமதுள்ளத்தில் எழத்தான் செய்கிறது.

இன்று மலர்ந்து மணம் பரப்பும் இப்புதுமையினை, மலராது என்று எழுதிய ஏடுகளும், கருகிவிடும் என்று கணக்கிட்ட எழுத்துலக மேதைகளும் உணர வேண்டும் என்பதற்காகவே சில உண்மைகளைக் காட்டியாக வேண்டுவது கடமையாகிவிட்டது.

மலர்ந்துவிட்ட புதுமை, புதுவை மண்ணில் தி. மு. கழகம் பெற்ற வெற்றிதான்; இந்த வெற்றி குறித்து ஆருடம் பார்த்து, ஆகாது, முடியாது என்று எழுதியதற்குக்காரணம் முன்னாள் முதல்வர் திரு. குபேர் அவர்கள், ஓராண்டுக்காலம் கழகத்தில் இருந்து வெளியேறியதேயாகும்.

திரு. குபேர் அவர்கள் தி. மு. கழகத்திலிருந்து வெளியேறினார்; விளக்கமாக, உண்மையைச் சொல்ல வேண்டுமானால் விலக்கப்பட்டு. வெளியேற்றப்பட வேண்டியவர் தி. மு கழகத்தின் அரசியல் நாகரீகத்தின் காரணமாக, வெறிப்பண்பை அமரர் அண்ணா அவர்கள் நமக்கு ஊட்டி வளர்க்காத காரணத்தால், திரு. குபேர் அவர்கள் வெளியேறினார்.

வெளியேறினார் என்று செய்தியை வெளியிட்டு, கழகத்தினரின் போக்கே காரணம் என்று கண்கட்டி வித்தையைக்காட்டிய நாளேடுகள் ஊரறிந்த அந்த உண்மையை அறிந்திருந்தும், நாட்டிற்கு அறிவிக்கவில்லை அதில் ஒரு அற்பமகிழ்ச்சி அவைகளுக்கு.

புதுவை மாநிலம் என்பது, புதுவைப் பகுதி, காரைக்கால் பகுதி, மாகி, ஏனாம் பகுதிகள் ஆகிய அனைத்தும் சேர்ந்தவையே.

புதுவைப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் இருபது பேர். இந்த இருபதில் தோழமைக் கட்சியாகிய வலது சாரிப் பொதுவுடைமைக் கட்சிக்கு ஏழு இடங்களைத் தந்த பிறகு. மிகுதி பதின்மூன்று இடங்களுக்குக் கழகம் போட்டியிட வேண்டியிருந்தது.

பதின்மூன்று இடங்களுக்கும் போட்டியிடத் தகுதி—பெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தலைமைக் கழகத்தால் அமைக்கப்பெற்ற குழுவிடம் வந்தது.

திரு. குபேர் அவர்கள், என்றுமே 'குழு' என்ற ஒன்றினை அறியாதவர்; எல்லாமே 'நான்' என்ற எண்ணத்தில் வளர்ந்தவர்.

பதின்மூன்று இடங்களுக்கும் அவரே பதின்மூன்று பேரைக் குறிப்பிட்டார். அவர்களில் ஒருவர்கூட கழகத்தின் தோழர்கள் இல்லை எல்லோரும் அவருக்கு வேண்டியவர்கள். கழகத்தின் வாழ்வோடு தங்களை இணைத்துக்கொண்ட, தகுதிபெற்ற ஒருவர்கூட தேர்தலில் நிற்க அவர் விரும்பவில்லை; இதைத் தலைமைக் கழகம் ஏற்கவில்லை; அதனால், 'இங்கே நிற்பவர்களைத் தேர்ந்தெடுக்க அங்கே இருப்பவர்கள் யார்?' என்ற கேள்வியோடு வெளியேறினார் குபேர்.

இதற்கு முன்னும், இதற்குப் பின்னும் அவர் நடந்துகொண்ட முறை, பேசிய பேச்சு ஆகியனவற்றைப் புதுவை மண் அறியும்,

வேடிக்கையே இங்குதான் துவங்குகிறது. திரு குபேர் அவர்களின் விலகல் செய்தியும், திரு. பூவராகன் அவர்களின் வரவேற்பும் ஒன்றாகவே வெளிவந்தன.

அன்றையப் பொழுது புதுவை காங்கிரஸ் கட்சிக்கு இன்ப நாளாகவே விடிந்தது; ஒரே குதூகலம்; குபேர் போய்விட்டார்; தி. மு. க. ஒழிந்தது; எதிர்காலம் நமக்குத்தான் என்று காங்கிரஸ்காரர்கள் ஆடிப் பாடினார்கள்; காங்கிரஸ் ஏடுகள் பத்திப் பத்தியாக குபேரின் புகழைப் பஜனையாகப் பாடின.

காங்கிரஸ் ஏடுகளின் பஜனைக்கும், பரவசத்துக்கும் உள்ள காரணத்தை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால், பாரம்பரியமிக்க சில நாளேடுகள் 'தின'மும் 'மணி'யடித்ததைத்தான் நம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை

'குபேர் விலகிவிட்டார்; புதுவையில் அவர்க்கு உள்ள மாபெரும் சக்தியைத் தி. மு. கழகம் இழந்துவிட்டது; இதனால் காங்கிரசுக்குப் பெருத்த நன்மை' என்றெல்லாம் அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள், நினைக்கிறார்கள், சொல்லுகிறார்கள் என்றெல்லாம் வாணவேடிக்கைகளை. விட்டன. அந்த ஏடுகள் தி. மு. கழகத்திற்கென்று சக்தியும் இல்லை, இன்னும் வளரவும் இல்லையென்ற போக்கில் படம் பிடித்துக் காட்டின. நடந்துமுடிந்த நகரமன்றத் தேர்தலில் கழகம் பெற்ற வெற்றிக்கு திரு. குபேர் மட்டிலுமே காரணம் என்று திரும்பத்திரும்பக் கூறிப் பொய்யை உண்மையாக்கப் பெரும்பாடு பட்டன ஏடுகள்.

இந்த நிலையில் குபேரின் ஆதரவாளர்கள் பலர் சுயேச்சைகளாகவும் தேர்தலில் போட்டியிட்டனர். சுயேச்சை வேட்பாளர்கள் 'குபேரின் ஆதரவு பெற்ற வேட்பாளர்' என்ற கொட்டை எழுத்துக்களில் தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டனர். குபேரின் ஆதரவாளர்களே மந்திரி சபை அமைப்பார்கள் என்றெல்லாம் வதந்திகள் உலவின. வதந்திகளை உண்மையாக்கும் வகையில் அந்த நாளேடுகள் செய்திகளை வெளியிட்டன.

இறுதியில், காசுக்கடை, குருசுக்குப்பம், திரிபுவனை, உப்பளம், காலாப்பேட்டை, உழவர்கரை, புதுசாரம் போன்ற தொகுதிகளில் திரு குபேர் அவர்கள் தனது ஆதரவாளர்களை வெற்றிபெறச் செய்ய 'மாடாய்' உழைத்தார். இவற்றுள் குருசுக்குப்பம், உப்பளம், காலாப்பேட்டை, உழவர்கரைத் தொகுதிகளில் திரு. குபேர் மானப்பிரச்சனையாகக் கொண்டு உழைத்தார்.

குருசுக்குப்பமும், உப்பளமும் குபேரின் கோட்டை என்பார்கள். அதனால்தான் உப்பளத்தில் தன் மருமகனை நிறுத்தினார்; குருசுக்குப்பத்தில் அவர் நிற்க விரும்பி, கடைசி

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 30—3—69 | இதழ் 37

பாகிஸ்தான்--ஒரு படிப்பினை!

சில விஷயங்களில் "எல்லாம் தானாக" பாகிஸ்தான் அதிபர் மார்ஷல் அயூப்கான் செயல்பட்டிருந்தாலும், நாட்டின் ஸ்திரத் தன்மை காப்பாற்றப்படவும், அரசியல் சட்ட சாசனம மதிக்கப்படவும் வேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் என்பது மறுக்க முடியாததாகும்.

மார்ஷல் அயூப்கான், தன்பதவிப் பொறுப்பினை, மார்ஷல் யாயாகானிடம் ஒப்படைத்துவிட்டு விலகிக் கொண்டிருப்பதுகூட, இந்த அடிப்படையில்தான் என்று அறிவிக்கப்பெற்றுள்ளது. கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக, பாகிஸ்தானில் நடைபெற்றுக்கொண்டு வந்த அராஜகப் போக்குகளும், வன்முறைச்செயல்களும், சட்டம்—ஒழுங்கு சீர்குலைவுகளுமாகச் சேர்ந்து அதிபர் அயூபை, இப்படியொரு நிலைமைக்கு வலுக்கட்டாயமாகத் தள்ளிவிட்டிருக்கிறது.

பாகிஸ்தானுக்குள்ளேற்பட்ட, இதுபோன்ற நிலைமைகளால், பாக். கின் அமைதிக்குலைவுபற்றி எதிர்பார்க்கப்பட்டதுதானென்றாலும், அதிபர் அயூப் திடீரென்று இப்படியொரு முடிவுக்கு வந்துவிடக்கூடும் என்பதனை அகிலம் எதிர்பார்க்கவில்லை.

ராணுவ ஆட்சி யென்பது, பாகிஸ்தான் மக்களுக்குப் புதுமையல்ல—பழகிப்போன ஒன்றுதான். 1958ல் இதே அயூப்கான், ராணுவப் புரட்சியின் மூலம்தான் அரசைக் கைப்பற்றி சில ஆண்டுகள் வரைக்கும் சர்வாதிகாரியாகவே இருந்து ராணுவ ஆட்சியை செயல்படுத்தி வந்திருக்கிறார்.

ஆனால் அதிபர் அயூப்கான் ராணுவ ஆட்சியைத் திணித்தபோதிருந்த நாட்டு நிலைமைகள் வேறு; இப்போதுள்ள நிலைமைகள் வேறு! அரசாங்க நிர்வாகமே அடியோடு நிலைகுலைந்து போய்விடத்தக்க நிலைமைகளும், பொருளாதாரத் துறையில் மிகப் பெரியதொரு வீழ்ச்சியும், உற்பத்திக் கூடங்களில் போதிய ஒத்துழைப்பின்மை—அக்கறையின்மை முதலான காரணங்களால் உற்பத்திச் சுணக்கமும் ஏற்பட்டு நாட்டை ஒரு உலுக்கு உலுக்கி வைத்திருப்பதுடன், பொதுமக்கள் வேறு, அச்ச உணர்வுக்கு ஆட்பட்டுப்போய், தம் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற தன்மையில் கவலையுடையோராய் இருக்கின்றனர்.

அரசுக்கு எதிரான வலுவான சக்தியொன்று இயங்கிக்கொண்டிருப்பதனை, மார்ஷல் அயூப் ஒப்புக்கொண்டிருப்பதுடன், அதனை அடக்கி ஒடுக்குவதில் தான் தோற்றுப் போய்விட்டதனையும் ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதனால் பாகிஸ்தானுக்குள்ளே அராஜகச்சக்தி மிகவும் பலத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது பெறப்படும்.

சீன ஆதரவாளர்கள் என்று வெளிப்படையாகவே கூறப்படுகிற புட்டோவும், மௌலானா பாஷானியும் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பகிரங்கமாகச் செய்து வந்திருப்பதனால், இவர்களது பின்னணியில் சீன பலம் இருக்கிறதோ என்று ஐயுறவும் இடம் உண்டு. சீனாவுடன், அயூப்புக்குள்ள உறவு சிலகாலமாகவே சரியில்லாமலிருந்து வந்திருக்கிறது என்பதனை மெய்ப்பிக்க, இது போதிய காரணமாகும்.

எது, எதனால் ஏற்பட்டிருந்தாலும், அதிபர் அயூப், பாக். அரசியலை விட்டு வெளியேறிவிட்டார். ஆட்சிப் பொறுப்பும் இராணுவத் தலைவரிடம் வந்து, அவரும், அமைச்சரவை, சட்ட மன்றம் முதலான அனைத்தையும் கலைத்துப் பிரகடனமும் செய்துவிட்டார்.

இந்நிலையில், மார்ஷல் யாயாகானினால் இதைவிட வேறொன்றும் செய்திருக்க முடியாது. ராணுவ ஆட்சி என்றாலே, தனி மனித சர்வாதிகாரம் என்பதுதான் பொருள். சர்வாதிகாரியாகிவிட்ட யாயாகான், தனக்கு, நாட்டில் ஒரு அமைதிச் சூழலை தோன்றுவித்து, சட்ட பூர்வமான ஒரு அரசை அமைத்து, ஆட்சிப் பொறுப்பை அதனிடம் ஒப்படைப்பது தவிர, வேறு ஆசைகள் எதுவும் இல்லை யென்பதனையும் சொல்லவேண்டிய நேரத்திலேயே சொல்லி விளக்கி இருக்கிறார்.

இனி, பாகிஸ்தானுக்குள் ஜனநாயக ரீதியான எந்த இயக்கமும் இயங்க முடியாது; குரலெழுப்ப முடியாது! நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

கலவரங்கள், குழப்பங்கள் என்றால் இராணுவ நீதிமன்றம், விசாரித்துத் தண்டிக்கும். அந்த தண்டனைக்கு அப்பீலும் இல்லை.

எனவே, இது போன்ற நடைமுறைகளால் பாகிஸ்தானில் மீண்டும் அமைதி நிலவுமா? சகஜநிலை மீளுமா என்பதனை இப்போது யாராலும் கணித்துக் கூறிவிட முடியாது. தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்டுகள் வேறு, தலைமறைவு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகளும் வந்ததுண்டு. கம்யூனிஸ்டு தலைமறைவுக் கொடுமைகளை—அவ்வளவு எளிதில் இனம் கண்டு கொள்ள முடியாது. எனவேதான் அமைதிச் சூழல்—இன்னமும் வினாக்குறியுடனேயே நிறுத்தப்படவேண்டியதாகிறது.

பாகிஸ்தான் அதிபராகவிருந்த அயூபின் வீழ்ச்சி மூலம், இந்தியாவும் சில படிப்பினைகளைக் கற்கவேண்டிய நிலையில்தான் இருக்கிறது.

மக்கள் குரல் மதிக்கப்பட வேண்டும் என்ற தெளிவு எந்த அரசுக்கு இல்லையானாலும், அதன் முடிவு இப்படித்தானிருக்க முடியும். இப்படியொரு நிலை ஒரு அரசுக்கு ஏற்பட்டுவிடுமேயானால் அப்புறம் "மக்கள் நெறி"யென்பது பைத்தியக்காரத்தனமானதாகி விடும். மறு ஆய்வுக்குரிய ஒரு தத்துவமாகிப் போகும்.

வலிவோடிருக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தை மட்டும் காட்டி, மாநிலங்களது உரிமைகளையெல்லாம், தனது விரலிடுக்கின் கீழ் கொண்டுவந்துவிட்டு, எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் தயவுக்குக் காத்திருக்கவேண்டிய நிலைமை நாளும் நாளும் வளருமானால், அதனால் எல்லா வகையிலும் பாதிக்கப்படுவோர் மாநில மக்களேயாவர்.

உறங்கிக்கொண்டிருக்கும் புலியைச் சீண்டிவிட்டுவிட்டு, புலிபாய்கிறது, புலிபாய்கிறது என்பதிலே பொருளேதுமில்லை. மக்கள் விழிப்பு என்பது உறங்கும் புலிபோன்றது. உரிமைகளைப்பறித்தல் என்பது—அதனைச் சீண்டுவது போன்றது.

பாகிஸ்தான் மூலம் நாடு படிப்பினை பெறவேண்டுமென்றால், அந்தப் படிப்பினை மேலே சுட்டிக்காட்டியதாகத்தானிருக்க முடியும்—இருக்கவேண்டும்!

கேட்டீரா சேதி!

யார் யாருக்கோ எத்தனை எத்தனையோ விதமான துரதிருஷ்டங்கள் ஏற்படுவதுண்டு. பரிசுச்சீட்டு வாங்கி இருப்போரில், பரிசுக்குரிய எண்ணுக்கு முன்னும், பின்னும் அடுத்தும், பிறகும் உள்ள எண்ணுள்ள சீட்டுக்களைக் கொண்டிருப்போர்கூட துரதிருஷ்டசாலிகள் தான்! என்றாலும், இது இன்னொரு முறை சோதனைக்குரியதாகவும் ஆகிவிடும். ஆனால் அரசியலில் ஒருவருக்கு துரதிருஷ்டம் என்றால், அதுவும் அமைச்சர் பதவியையே கபளீகரம் செய்யக்கூடிய அளவுக்குள்ள துரதிருஷ்டம் என்றால் வருத்தப்படாமலிருக்க முடியுமா? அசாம் மாநில சீர்திருத்தத்துக்கான வகை செய்யும் அரசியல் சட்டத் திருத்த மசோதா ஒன்று தோன்றுப் போனதால், ரகுராமையா என்ற துணை பார்லிமெண்டரி விவகார அமைச்சர் தமது பதவியையே இழக்க வேண்டிய துரதிருஷ்டம் ஏற்பட்டது. எதிர்க் கட்சிக்காரர்களால் மசோதா தோற்கடிக்கப்பட்டு, இப்படியொரு நிலைமை யேற்பட்டிருந்தால் கூட மனதுக்குச் சற்று ஆறுதலாகவிருக்கும். தன் கட்சிக்காரர்களாலேயே—அதுவும் பத்துக்கு மேற்பட்ட அமைச்சர்களினாலேயே தன் பதவி, வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்படுகிறது என்கிறபோது அது எத்தகைய துரதிருஷ்டம்? சாதாரணமானதா என்ன? எளிதில் ஆறக்கூடிய புண்ணா இது? இது சாதாரண விஷயம் அல்லவென்றும், கடுமையானது என்றும் இந்தியப் பிரதமர் கருதினாராம்! "கடுமை" யென்று பிரதமர் கருதியதனால் தானோ என்னவோ சம்பிரதாய நடைமுறைகளையும் மீறி, ராஜினாமா ஏற்கப்படாமல் போய்விட்டது. எல்லா உறுப்பினர்களும் வோட்டளிக்கத் தக்க அனைத்து நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்ட முறைகளுக்காகப் பாராட்டவும்பட்டிருக்கிறார். இவரோடிணைந்த இரு. துணைக் கொறடாக்களது பதவிக்கு வந்த ஆபத்தும், பிரச்னையோடு முற்றுப் பெற்றுவிட்டது! இவைகள் எல்லாம் அனுமதிக்கப்படவில்லையென்றால் அப்புறம் ஜனநாயகம் எதற்கு?

* * *

இந்தியத் துணைக்கண்டத்தில் மதுவிலக்குப் பிரச்னை, முக்கியமான கட்டத்தை எட்டிப்பிடித்து சுவையான சர்ச்சைகளையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. மதுவிலக்கு விவகாரம் ஒரு தத்துவார்த்த ரீதியான கொள்கையாகும்! இங்கே இந்த தத்துவம், படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறது. மதுவிலக்கு பற்றிப் பிரசாரம் செய்வோரில் பலர், நீதிமன்றத்தின் கண்டனத்துக்குக் கூட ஆளாகியிருக்கின்றனர் என்றாலும் அந்தப் போதை யார்யாரை எப்படி எப்படியோ தலையாட்ட வைத்து விடுகிறது! மக்களவையில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டபோது, அமைச்சர்கள் மதுவிலக்குப் பற்றி ஊருக்குரைக்க முன்வரும் முன்பு, அமைச்சர்களும் அவர்களது பிள்ளைகளும் முதலில் குடிப்பதை நிறுத்திவிட்டுபிறகு பேசட்டும்என்று ஒருவர்சொல்ல, இதனை இன்னொருவர் மறுக்க விவகாரம், சூடேறி—"குடிகாரர்கள் எல்லாம் அமைச்சர்கள் ஆகிவிட்டார்கள்" என்று கொதிப்படைந்து இன்னொருவர் கூற, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டுமிருந்த சட்ட அமைச்சர் கோவிந்தமேனன் வாயடைத்து நிற்கவுமான நிலைமை ஏற்பட்டுவிட்டிருக்கிறது! மது அருந்திய பின் ஏற்படும் நிலை என்று கூறத்தக்க நிலைமை, அதுபற்றிய சர்ச்சையிலேயே ஏற்பட்டுவிட்டிருக்கிறது! அதுவும் மக்களவையிலேயே!! இங்கே தமிழ் நாட்டில் என்றால், இதற்கொரு போராட்டம்! அதற்கொரு போராட்டம் என்று ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்! காங்கிரசுக்காரர்களின் இதுபோன்ற கேலிக்கூத்தைக் கண்டிக்க ஒரு போராட்டம் நடத்த முன்வரக் கூடாதோ என்று கேட்கலாம் போலத் தோன்றுகிறது! யாரிடம் கேட்பது! எவரிடம் முறையிடுவது!!

* * *

மே. வங்கத்தில் போலீசுத்துறை இடது கம்யூனிஸ்டுகள் கைக்குக் கிடைத்தவுடனேயே—அதன் எதிரொலிகள் தோன்றத் தொடங்கிவிட்டன! நக்சல் பாரியில் கலகம் விளைவித்ததற்காகவும் கொள்ளை! கொலைகள் செய்ததற்காகவும் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவரையும் புதிய போலீஸ் அமைச்சர், நிபந்தனையின்றி விடுதலை செய்திருக்கிறார்! மே. வங்க நிலையைத் தொடர்ந்து கேரளாவில் இதுபோன்ற வன்முறைகள் தலையெடுத்து அமைதியைக் கெடுத்தன! அதையொட்டி தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் தன் கைவரிசையைக் காட்டியது. அதே சமயம் ஆந்திர மாநிலத்திலும் ஆல வட்டம் வீசியது! அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்திருக்கும் இந்த வன்செயல் கும்பல்களை ஊக்குவிப்பதுபோன்ற நடவடிக்கை தான் விடுதலை விஷயம்! விவகாரம் மே. வங்கத்துடையதுதானென்றாலும், நாமும் அதனால் பாதிக்கப்படுகிறோம் என்கிறபோது, அது பற்றிக் கொஞ்சம் அக்கறையெடுத்துக்கொள்ள வேண்டியேற்படுவது இயற்கைதானே!

* * *

மூடப்பட்டிருக்கும் ஜவுளி மில்கள் பற்றிய விவகாரத்தை, சட்டமன்றக் கூட்டம் முடிந்ததும் துரிதமாக கவனிக்கப்போவதாக தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அறிவித்திருக்கிறார். இதேபோல் வேறு சில மாநிலங்களில் மூடப்பட்டு, பின்னர் மத்திய அரசின் உதவியோடு தொடங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். ஜவுளி ஆலைப் பிரச்னையினை தொழிலாளர் வாழ்வோடு இணைத்து, அனுதாபத்துடன் கவனிக்க வேண்டியிருக்கிறது என்பதும் முதல்வரின் அறிவிப்பு. இந்தப் பிரச்னையுடன் மற்றொன்றையும் சேர்த்துக்கொண்டு சிந்தித்தால் பயனுடையதாகவிருக்கக்கூடும். இங்கிலாந்தில் ஆலைத் தொழில் முதன்முதல் தோற்றுவிக்கப்பட்டபோது எழுந்த பல பிரச்னைகளைச் சமாளிக்க, வெளிநாட்டு இறக்குமதிகள் எதனையும் அனுமதிக்காமல் — வலுக்கட்டாயமாகத் தடுத்து — சமாளித்து வெற்றியும் கண்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டம், இப்போதைய இந்த ஆலைப் பிரச்னையில் இதுபோல் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் பற்றி யோசிக்கவேண்டும். வேண்டாத பல வெளிநாட்டு ரகங்களை உடனடியாகத் தடுக்க முயலவேண்டும். முயன்றால் முடியும்! தமிழகம் இதனை எடுத்துக் காட்டினால் நல்லது!

முகப்பில்: தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள்

தம்பி

நாடகமொன்று காணப்போகிருய் இப்போது—சுவை தருவதுதான்! கருத்துடன் காண்போர் பயன்பெற முடியும். கண்ணை மட்டுமே பயன்படுத்துவோர் களிப்பு மட்டுமே பெற இயலும். நான் பேசிக்கொண்டே இருக்கிறேனே அதோ பார் கண்களிலே காதல் ஒளி பூத்திடும் நிலையில் ஓர் கன்னி — பகையும் படையும், பழியும் பரிகாசமும், எது குறுக்கிட்டாலும் அஞ்சாது நின்று, காதலுக்காகத் தன்னை அர்ப்பணித்துவிடும் அழகரசி!

''கண்ணாளா! என்னை உம்மிடமிருந்து பிரித்துவிட எவர் என்ன சூழ்ச்சி செய்யினும், வெற்றி பெறப்போவதில்லை. வியர்த்து, விம்மிக்கிடக்கும் இந்த வறியவளா, சீறி எழும் பகைதனைக் கண்டு கலங்காதிருக்கப்போகிருள்? பெற்ருேர் மிரட்டினல் பெரும்பீதி பிறக்கும்! ஊர்ப்பகை கிளம்பிடின் உள்ளம் நடுக்குறும்!! கொற்றம் கோலெடுத்தால் குலை நடுங்கும்! இவளோ இளையவள் — என்ன செய்யவல்லாள்? என்று எண்ணுதீர்! ஏந்திழையே! என் இதயராணி! தண்ணொளி தந்து தரணிக்கே தனியானதோர் 'தகத்தகாயத்தை'த் தரும் வெண்ணிலவு! அதுபோன்றே ஆரமுதே! உன் அன்பொளி பட்டதும், என் உள்ளமே புதுப்பொலிவு பெறுகிறது என்று அன்ருேர் நாள் என்னிடம் கூறினீரே! என்னை வாழ்விக்க வந்த வேந்தே! காதலிக்கவும், அதற்குத் தடை ஏற்பட்டால் உருகிக் கருகிப் போகவும் மட்டுமே என்னல் முடியும் என்று எண்ணுதீர். என் காதலைக் கருக்கிடத் துணிவோரை எதிர்த்து நின்று, வெற்றிபெறும் ஆற்றலும் பெற்றவள் நான்!''

30.3.69

உழைப்பே செல்வம்!

'என் அன்பே அன்னமே!' றும் இந்த தல்லவா, ''தேனின் தென்றலின் பூத்துக்குரின் கவர்ச்சி

இன்பமே! ''என்றென் அன்பு மாரு மன்னவா?'' இனிமையும், குளிர்ச்சியும், லூங்கும் மலயும்மாறுமோ

மைவிழியாளே!'' 'ஏனோ என்னைப்பெற்ருேர் நம்மைப் பிரித்திடும் பேய்க்குணம் கொண்டோராயினர்! வானத்து வெண்ணிலவைப் பறித்தெடுத்து சதுப்பு நிலத்திலே ஆழப் புதைத்துவிட எண்ணுவதா, அறிவு!''

''காதலின் வலிவு, எத்தகையது என்பதை அவர்கள் காண விரும்புகின்றனர் போலும்''

''கட்டாரியை என்மார்பில் பாய்ச்சிடும்போது, குபுகுபுவெனப் பொங்கி எழும் குருதியும், என் அரசே! உமது திருநாமத்தைத் தான ஒலிக்கும்......''

''கொத்தும் கழுகையும் துரத்திவிட்டு, கோலமயிலே! நான் பிணமாகிப்போன நிலையிலிருந்தும் மீண்டெழுந்து வந்து, உன் பக்கம் நிற்பேன், ஒருகணம் காண்பேன், ஓவென அலறி வீழ்வேன்—உன்னை அணைத்தபடி உயிர் துறப்பேன்''

தம்பி! போதும், இந்தப் பக்கம், பார்.

நாடகக் கொட்டகையில் காணும் இந்தக் காதற் காட்சியைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டே காலத்தை ஓட்டிவிடுவதற்கில்லை; காரியமாற்றவேண்டும் நிரம்ப; காதல்

நெளிய, குழைய, பூவிதழ் விரித்திட!

மட்டும்தான் உனக்குள்ள வேலை என்று எண்ணிக் கொண்டு, இன்னும் என்ன? மேலால் என்ன? காதல் கைகூடிற்றா? கட்டழகி கடிமணம் புரிந்துகொண்டாளா, அல்லது காதகர் வெற்றிபெறக் கண்டு, கட்டாரிக்கு இரையானாளா என்பது அறிய மற்றக் காட்சிகளுக்காக ஏங்கித் தவிக்காதே. நாடகக் கொட்டகையைவிட்டு எழுந்துவா, போவோம்! காலையில் வேறோர் காட்சி காணவேண்டும்!

"பயிர்களுக்குப் பூச்சித் தொல்லை ஏற்படாதிருப்பதற்காக, எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முயற்சி பாராட்டத்தக்கதுதான்; ஆனால் செலவினத்தைப் பார்க்கும்போது, சங்கடமாக இருக்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைக்கான துறையிலே எவ்வளவு பெரும் பொருள் செலவிடுவதும் தவறல்ல தான்; எனினும் பயன் கெடாதமுறையில் செலவின் அளவைக் குறைத்திட முடியுமா என்பதுபற்றி நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்."

"பூச்சிகள் முழுவதையும் ஒழித்திடாமல் பாதி அளவு மட்டும் ஒழித்திடலாம் என்பது, அம்மையாரின், வாதமோ!"

"அப்பாவியும் அப்படிக் கூறுனே! அன்புக்கே உறைவிடமான தாய்க்குலத்தவளான நானு அதுபோல் எண்ணுவேன். பரிகாசம் பேசும் தோழர், சிறிதளவு பொறுப்புணர்ச்சியைக் காட்டி நான் கூறும் பிரச்சினைக்கு விளக்கம்தர வேண்டுகிறேன்."

"பெரும் பொருள் செலவாவது உண்மைதான்! ஆனுல் பயிரை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொன்றொழிக்க இந்தப் பொருள் தேவைப்படுகிறது,"

"பூச்சிகளை ஒழித்திட, இப்போது நாம் தெளிக்கும் மருந்து வகையின் உற்பத்திச் செலவை, மேலும் குறைத்திட நமது விஞ்ஞானிகளிடம் யோசனை கேட்கப்பட்டதா?"

"இந்த யோசனை நிச்சயம் கவனிக்கப்படும்."

"நன்றி! விரைவில் கவனிக்க வேண்டுகிறேன்."

என்ன தம்பி! இப்படிப் பார்க்கிருய்? பகட்டுடையின்றி, எளிய தோற்றத்துடன், குழுவில் அமர்ந்து, உழவு முறை, விஞ்ஞான வளம், பொருளாதாரப் பிரச்சினை குறித்தெல்லாம், தெளிவும் கனிவும் காட்டிப் பேசிடும், இந்தக் காரிகை யார்? எங்கோ பார்த்த முகம்போலிருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிருய் அல்லவா! உனக்கேன் தொல்லை, நான் கூறிவிடுகிறேன். இதோ நாட்டு ஆட்சிமுறைக் குழுவில் அமர்ந்து பணியாற்றும் இந்த நாரீமணிதான், நேற்றிரவு, நாடக மேடையில் கண்களிலே நீர்த்துளிர்க்க, கேட்போர் மெய்சிலிர்க்கும் விதமாகப் பேசி நடித்த நங்கை. முன்னுள் இரவு நடிகை! இங்கு, ஆட்சிமன்ற அலுவலில் ஈடுபட்டுள்ள மாதரசி!

தம்பி! நீயும் நானும் சீனு சென்றுல், கற்பனைபோல் தோன்றும் இந்தக் காட்சியில் காணப்படும், காரிகையைச் சந்திக்கலாம்!!

டியன்ஹுவா என்றோர் நடிகை. சீன நாட்டில் பெரும் புகழ்பெற்று விளங்கி வருவதுடன், தேசீய மக்கள் காங்கிரசில் உறுப்பினராகவும் அமர்ந்து அரும்பணியாற்றுகிருர்.

நாடகத் துறையிலும், படக்காட்சித் துறையிலும் ஈடுபட்டு, கலைஞர்களின் நன்மதிப்பையும் மக்களின் பேராதரவையும் காணிக்கையாகப் பெற்றுத் திகழும் டியான்ஹுவா நாட்டாட்சிப் பிரச்சினையிலும் ஆர்வம் காட்டுவதுடன், ஆட்சிப் பிரச்சினையைக் கவனிக்கும் மன்றத்திலமர்ந்து அரும்பணியாற்றுகிருர் — இன்றைய சீனவில்—செஞ்சீனவில்.

வயது 27! வசீகரமான தோற்றம்! கலைத்திறம் வளமாக இருக்கிறது! நாடகமேடையில் 'நவரசம்' சொட்டச் சொட்ட நடித்து மக்களை மகிழ்விக்கிருர். ஆட்சிமன்றக் குழுவில் காலையில் அமர்ந்து அரும்பணியாற்றுகிருர்.

புன்னகையும் பெருமூச்சும், பொறிபறக்கப் பேசுவதும், புலம்பி நிற்பதும், தேன்மொழி பேசுவதும், திகைப்புண்டு நிற்பதும், தாபத்தை வெளியிடுவதும் தத்தளிப்பைக் காட்டுவதும், நாடக மேடையில்! ஆய்வுரை நடத்துவதும் ஆதாரங்கள் காட்டுவதும், புள்ளி விவரம் கேட்பதும் பிரச்சினைகளை அலசுவதும் மன்றத்திலே.

நாடகமாடும் நாரீமணிதானே, நடனத்தின் மூலம் நானுவிதமான உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட, நெளிய, குழைய, பூவிதழ் விரித்திட, பூங்கொடி போலாடிட, கலைந்திடும் கூந்தலையும், நெகிழ்ந்திடும் ஆடையையும், வளைகுலுங்கிடும் கரத்தால் சரி செய்து காட்ட, இயலுமேயன்றி, மக்கள் சார்பாகப் பேச பணி புரிய, திட்டங்களை ஆராய, கருத்துரை தர எங்ஙனம் இயலும், என்று, சீன நாட்டிலே கேட்க வில்லை.

சாய உதட்டுக்காரி, சல்லாபப் பேச்சுக்காரி,—சட்டம் இயற்றும் இடத்திலே ஏன் இருந்திட வேண்டும் என்று கேட்கக் காணுேம்.

இங்கு—காமராஜர் கேட்கிருர்—அவர் கேட்கிருரே நாமும் அதே 'பாணியில்' பேசியாக வேண்டுமே—(ஒப்பந்தத்தை மீறலாமா!!) என்று எண்ணிக்கொண்ட நிலையில் வேறு சிலரும் கேட்கிருர்கள், நாடகமாடிகள் நாடாள்வதா! என்று

உலகுக்கோர் புதுமை, என்று கொண்டாடப்படும் சீனவில் நாடகமாடும் நாரீமணி நாட்டாட்சிக் குழுவிலும் அமர்ந்திட முடிகிறது! உலகத் தலைவர்கள் வரிசையில் இடம் பெற்றுத் திகழும் சோ-இன்லாய், அந்த 'நடிப்புச் செல்வி'யைப் பாராட்டுகிருர் என்று நாளிதழ்கள் கூறுகின்றன.

தம்பி! நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்தவுடன், நம்மீது வீசப்படும் கணைகள் பலப்பல!! கலை உலகினர் நம் கழகத்தில் உள்ளனர் என்பதால் ஏற்பட்ட காய்ச்சல் கசப்பாக மாறி, இப்போது கடு விஷம் கக்குகின்றனர், உள்ளம் வெதும்பிய நிலையில் உள்ளவர்கள்.

நாடகமாடுவோருக்கும் நாட்டாட்சிப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்கின்றனர்.

நாடகமாடுவோர், நாட்டாட்சி மன்றத் தேர்தல்களில் ஈடுபடக் கூடாது என்று கண்டித்துப் பேசுவோர் தத்தமது தரத்துக்கு ஏற்ப ஏசுகின்றனர் நமது கழகத்

வானம் இடியாதோ? பூமி பிளக்காதோ?

தில் ஈடுபடுவடுவதால் கலைஞர்களுக்கு ஏற்படும் பல தொல்லைகளிலே ஒன்று, இந்தத் தாக்குதல். எனினும் அவர்கள் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர்கள் ஆகையால் இந்த இழிமொழிகளைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை.

சீன நாட்டு நடிகை பற்றிய கட்டுரை காண நேரிட்டது; களிப்பும் நம்பிக்கையும் பிறந்தது, நாடகமாடிகள் நாடாள்வதா என்று நையாண்டி செய்வோர், இதைக் கண்டு திருந்துவார்கள் என்ற நம்பிக்கையில் இதை எழுதவில்லை! அவர்கள் நாடகமாடுவோர் மீதா கோபப்பட்டுள்ளனர்—தங்களிடம் இல்லையே, என்பதல்லவா, அவர்கட்கு உள்ள கோபம்!

நாடகமாடிகட்கு நாட்டாட்சியில் என்ன வேலை என்று, இன்று கேட்கும் இவர்கள், நாம் நாடகமாடிய போது. ஏதும் ஏசாதிருந்தனரோ எனில் இல்லை, இழிமொழி வாணிபம் அப்போதும் நடாத்தி வந்தனர்.

நாடாளும் முறை குறித்து மக்களைப் பக்குவப் படுத்த, பொதுவாழ்வுத் துறையில் ஈடுபடுவோர் நாடகமாடுவதா' என்ன கேவலம், எத்தனை அக்ரமம்! வானமே! இடிந்து விழாயோ!! பூமியே! பிளந்து விழுங்காயோ!! ஆடை அணிகளே! அரவமாகி அவர்களைக் கடித்துச் சாகடிக்காயோ!—என்றெல்லாம் அலறித் துடித்து அழுதனர்.

தம்பி, நான் படித்த சீன நாடு பற்றிய கட்டுரையில் காண்கிறேன், மேனாட்டு ராஜதந்திரிகளும் கண்டு வியந்திடத்தக்க திறன்படைத்த சோ-இன்-லாய் நாடகம் காண்பதில் பேரார்வம் கொண்டவராம்—அது மட்டுமல்ல, அவருக்கே நடிப்பதில் மெத்த விருப்பமாம்—பல முறை நாடகமாடியும் இருக்கிறாராம்!

சீறிடும் ஏறுகள் அங்கு கிளம்பி, நாடகமாடி நாடாள்வதா? என்று கேட்கக்காணோம்! இது குறித்து நான் எண்ணிக்கொண்டிருக்கும்போது, தம்பி இன்றைய தபாலில் கிடைத்தது மற்றோர் தகவல்.

வெண்புறா வட்டமிட்டுச் செல்கிறது, வானத்தில்—வடிவழகன் அதைக் கண்டு வியக்கிறான்.

புறா திடீரென்று ஆபத்தினின்றும் தப்ப, திசைமாறிச் செல்கிறது—இளவலின் கண்களுக்குத் தெரியவில்லை.

எங்கே என் புறா? சிறகடித்துச் சிங்காரமாகப் பறந்த என் வண்ணப் புறா எங்கே? என்று தேடி அலைகிறான் குமரன்.

"கொஞ்சும் புறாவே
நெஞ்சோடு நெஞ்சம்
உறவாடிட
வாராததேனோ"

என்று இசைபாடி, வெண்புறாவைக் கொஞ்சுகிறாள், கண்டாரைக் கொல்லும் ஓர் கட்டழகி.

அவன் வருகிறான், அவள் பார்க்கிறாள்!!

அம்புவிழி தொடுக்கிறாள், வம்பு வந்து சேருகிறது!

தம்பி! சாரங்கதரா நாடகம்.

இதிலே சித்திராங்கி பாத்திரம், காவி உடையோனையும் கரையச் செய்யும் என்பார்கள்.

இந்தச் 'சித்திராங்கி' வேடத்தை அருமையாகத் தாங்கி நடித்தவராம், ஆந்திர நாட்டுத் தலைவர், பிரகாசம்!!

இந்தருசிகரமான சேதியை 'சோஷலிஸ்ட்டு' இதழில் காண்கிறேன்; இதோ அது படித்துப்பார், தம்பி, பகைக்குவதுதான் பழைய தொடர்புக்கு இலட்சணம் என்று எண்ணிக்கொண்டிருப்போருக்கும் காட்டு, பார்க்கச் சம்மதித்தால்.

"தி. மு. க.வின் பேரில் காமராஜ் சுமத்துகிற குற்றச்சாட்டு மிகவும் விநோதமானது. "அவர்கள் நாடகமாடுவோர்கள், நாடாள்வதாவது" என்று கேட்கிறார். இருந்திருந்து பிடித்தாலும் புளியங்காம்பைப் பிடிக்க வேண்டும் என்னும் கதையாக ஒரு அருமையான பாயிண்டைக்' காமராஜர் பிடித்திருக்கிறார். இதற்காக அவரைப் பாராட்டவே வேண்டும்.

இந்த நாடகமாடுவோரைப் பற்றி அபேதவாதிக்கு ஒரு சில சம்பவங்கள் தெரியும்.

ஆந்திர நாட்டில் ஒரு மகாராஜா இருந்தார். அவர் கலைப்பிரியர், அவர் முன்னால் ஒரு சில இளைஞர்கள் சேர்ந்து சாரங்கதரா நாடகம் நடத்திக் கொண்டிருந்தனராம். அதில் சித்திராங்கி வேஷம் தரித்து ஒரு இளைஞன் அற்புதமாக நடித்தானாம். அந்த இளைஞன் பேரில் மகாராஜாவுக்கு அபாரபிரியம் ஏற்பட்டு அந்த இளைஞனின் படிப்பு எல்லாவற்றையும் தானே கவனித்துக்கொண்டாராம்.

இந்த இளைஞர்தான் இன்றைக்கு ஆசியாவிலே வயது முதிர்ந்த அரசியல்வாதியாகத் திகழ்ந்துவரும் ஆந்திரகேசரி தங்சுத்தூரு—பிரகாசம் பந்துலுகாரு அவர்கள். அவர் நாடகமாடியவர். அதனால்தானா சென்னை முதன் மந்திரி பதவியிலேயிருந்து அவரை விரட்டினார் காமராஜர்?

அவ்வளவிற்குப் போவானேன்? காமராஜர் என்கிற பெயரை உலகுக்கறிவித்து அவரை அரசியல் வாதியாக்கிவிட்ட பெருமை வாய்ந்தவர் ஸ்ரீசத்தியமூர்த்தி அவர்கள்.

சத்தியமூர்த்திக்கு நல்ல சங்கீதம், நாடகம் இவற்றில் அபார பிரியம், கே. பி. சுந்தராம்பாள், எஸ். ஜி. கிட்டப்பா ஆகியோர் அவருக்கு அத்யந்த நண்பர்கள். இது மட்டுமல்ல அவரே சிலதடவைகளில் அரிதாரம், முத்துவெள்ளை தடவிக்கொண்டு நாடகம் நடித்துள்ளார்.

காமராசருக்கு இவ்விஷயத்திலும் சந்தேகமிருந்தால் 'தீரர் சத்தியமூர்த்தி' என்று பத்து வருடத்திற்கு முன்னால் ஒரு புத்தகம் வந்துள்ளது. அதில் வேஷம் போட்டபடியே இருக்கும் சத்தியமூர்த்தியின் படமும் வந்துள்ளது. தயவுசெய்து அதையாவது பார்த்துக் கொள்ளட்டும்."

தேர்தலில் நாம் ஈடுபடத் தீர்மானித்ததும், திகில் கொண்டோரும் பொறாமை கொண்டோரும், மக்களிடம், நம்மைப் பற்றிக் கேவலமான முறையில் இழித்தும் பழித்தும் பேசுவதன் மூலம், நமக்குப் பெருந் தோல்வியை ஏற்படுத்தலாம் என்று எண்ணிக் கொள்கின்றனர்.

வெற்றி பெற்றாகவேண்டும் என்ற வெறி பிடித்தும் நாம் அலையவில்லை. தோல்வி ஏற்பட்டுவிடுமோ

கவர்னரின் கைலாகு! கலெக்டரின் கட்டியம்!

என்று 'தொடை நடுக்கமும்' நாம் கொண்டில்லை; இதனை வசவாளர்கள் உணர்ந்துகொள்ளும் நிலையிலும் இல்லை.

பதவியைச் சுவைத்துக்கொண்டு, அந்த இனிப்பில் சொக்கி, புதிய 'பவிசு' கண்டு பல்லிளிப்போரின் பராக்குப் பெற்றுப் பூரித்துக் கிடப்போருக்கு, தேர்தல் வருகிறது என்றதும் திகில் பிறக்கத்தான் வேண்டும். மீண்டும் இதே சுவை கிடைக்குமா, அல்லது தட்டிப் பறித்துக் கொள்வரோ, என்றெல்லாம் ஏக்கம் பிறக்கும்.

கவர்னர் கைலாகு கொடுக்க, கலெக்டர் கட்டியங் கூற, பிரமுகர்கள் பராக்குகூற அதிகாரிகள் கனிவு காட்ட கட்டிடங்கள் கண் சிமிட்ட, பவனி நடத்துகிறோமே—இது மறுபடியும் கிடைக்குமா, அல்லது பால் தராத பசுவுக்கு 'தரும விடுதி வாசம்' கிடைப்பது போல பயன் கெட்ட பொருள் பரணைக்குச் செல்வது போல, நாமும் கேட்பாரற்றுப் போய்விட நேரிடுமா என்ற கவலை அவர்கட்கு ஏற்படவேண்டும். அந்த அச்சமும் கவலையும் அவர்களை ஆலாய்ப் பறக்கவைக்கிறது, ஆருடம் கேட்கச் செய்கிறது, ஆதரவு பெறுவதற்கு யாரரிடம் ஐயா! அப்பா' என்று கெஞ்சவேண்டும், எவரெவருக்கு என்னென்ன அச்சாரம் தரவேண்டும் என்றெல்லாம் சிந்திக்க வைக்கிறது; நமக்கென்ன நடுக்கம் தம்பி! மயிலுக்குக் கண்ணிவைத்தேன் மாமன் மகளே! குயில்வந்து விழுந்தது பார், கொண்டேனடி பெண்ணே'' என்று வயலோரத்தில் பாடுவார்கள் தம்பி, அதுபோலப் பாடிவிட்டுப் போவோம் கவலை என்ன!!

தேர்தலிலா நிற்கிறீர்கள்? கூத்தாடிகளே! நீங்களா தேர்தலில் ஈடுபடுகிறீர்கள்? என்று ஏதோ நையாண்டி செய்வதுபோலப் பேசுகிறார்களே தவிர உள்ளூர அவர்கட்கு நடுக்கம்; நாம் எப்படிப்பட்ட பலசாலிகளோ என்பதுகூட அல்ல அவர்கட்குப் பிரச்சினை, ''எப்படிப்பட்ட தவறுகளெல்லாம் செய்து தொலைத்துவிட்டிருக்கிறோம்; எத்தனை வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டோம்; எத்தனை விதமான ஊழல் ஊதாரித்தனம் வெடிக்கின்றன. மக்களின் வாழ்விலே எத்தனை எத்தனை இடிகள், அதிர்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன; எவ்வளவு அடக்கு முறையை அவிழ்த்து விட்டுவிட்டோம்; இவைகளுக்கெல்லாம், மக்கள், பாடம் புகட்டக் காத்துக்கொண்டிருக்கிறார்களே; இந்தப் பாவிகள் பிரச்சினைகளைப் புட்டுப் புட்டுக் காட்டுகிறார்களே; வடநாடு கொழுக்கிறது, தென்னாடு தேய்கிறது என்பதற்கு ஆதாரம் தருகிறார்கள், புள்ளி விவரம் காட்டுகிறார்கள், பாடல்கள் தருகிறார்கள் படம் போட்டுக் காட்டுகிறார்கள், நாடகமே ஆட முடிகிறது; அத்துடன் விடாமல், நம்மவர்களே அவ்வப்போது பேசுவதிலிருந்தே, வடநாட்டு ஆதிக்கம் இருப்பது விளங்கிவிட்டது கேளீர் என்று எடுத்துக் காட்டுகிறார்கள்; உரிமையைப் பாதுகாத்திட முடிந்ததா? வாழ்வில் வளம் கிடைத்திடச் செய்யமுடிந்ததா? என்று கேட்கிறார்கள்! தேவிகுளம் பீர்மேடு பகுதிகளை இழந்துவிட்டு இளித்த வாயரானார்கள், இந்த இலட்சணத்தில் இவர்களுக்கு வாய்மட்டும் இருக்கிறது காதுவரையில் என்று கேலி செய்கிறார்கள். சித்தூர் திருத்தணி எங்கே? என்று கேட்கிறார்கள்; நிலச் சீர்திருத்தச் சட்டம் என்னகதியாயிற்று என்று இடித்துச் காட்டுகிறார்கள்; செச் செச்சே! பெரிய தலைவலியாகிவிட்டது; வாயை அடக்கலாம் என்றாலோ, எவ்விதமான அடக்குமுறைக்கும் தயார் என்கிறார்கள்; இந்த நிலையில் தேர்தல் வருகிறதே என்ன ஆகுமோ, ஏது நேரிடுமோ, என்று அவர்களுக்கு அச்சம், நிச்சயமாக!

தேர்தல் வரட்டும், ஒரு கை பார்த்தே விடுகிறோம் என்று பேசுகிறார்களல்லவா, சென்ற தடவை இவர்களின் கதி என்ன ஆயிற்று தெரியுமோ! மறந்துவிட்டார்கள், மகானுபாவர்கள்! மக்கள் மறக்கவில்லை! மண்ணைக் கவ்வினார்கள், மாபெருந்தலைவர்களெல்லாம்! மண்டைக் கனம்கொண்டு பேசுகிறார்களோ என்று எண்ணிக் கொள்ளாதே தம்பி, பழைய சம்பவம் நினைவிற்கு வந்ததால், மருட்சி அடைந்து பேசும் பேச்சு அது, ஒரு கை பாத்துவிடுவோம் என்பது!

அவர்களுக்கு நினைவிலில்லாமற்போகும், தம்பி, ஒன்று உனக்குக் கவனத்திலிருக்கட்டும் — சென்ற பொதுத் தேர்தலில் பெருந் தலைவர்கள் பலர் பிடரியில் கால்பட ஓடினர்; சிலர் கொல்லைப்புற வழியாக நுழைந்துகொண்டு கொலு விருக்கின்றனர்; வேறு சிலர் 'வனவாசம்' சென்றுவிட்டனர்; ஆனால் அனைவரும் அல்லல் எவ்வளவு படவேண்டுமோ, பல்லைக் காட்டி எவ்வளவு கெஞ்ச வேண்டுமோ அவ்வளவும் நடந்தேறிற்று; அவ்வளவுக்குப் பிறகும், மொத்தத்தில் கணக்குப் பார்க்கும்போது, காங்கிரசுக்குக் கிடைத்ததை விட, காங்கிரசல்லாதாருக்குத்தான் மக்களின் ஓட்டு அதிக அளவு கிடைத்தது. ஆனால் இடதுசாரிக் கட்சிகள் என்பவைகளுக்குள் ஒரு கூட்டு எண்ணம் ஏற்பட முடியாமல் போய்விட்டது; அதனால் காங்கிரஸ் இங்கு ஆட்சியில் அமர முடிந்ததே தவிர, மக்கள் விரும்பி அழைத்ததால் அல்ல, ஆதரவு அளித்ததால் அல்ல. காங்கிரசிடம் நம்பிக்கையில்லை என்பதைத்தான், கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் தெளிவாக எடுத்துக் காட்டினர்!

மூக்கறுபட்டும், முகத்தில் கரி பூசிக்கொண்டும் முக்காடிட்டும் மூலையில் சென்றும், பலர் பதுங்கினர்.

என்னமோ, நின்ற முன்னூறு இடங்களிலும் இவர்கள் முன்பு வெற்றி பெற்றுவிட்டதுபோலவும், இன்றைய தேர்தலில் அதுபோலவே, எங்கும் 'ஜெய பேரிகை' கொட்டப்போவது போலவும், முழக்கிக்கொண்டு வருகிறார்களே தவிர, உண்மையை மக்கள் மறந்துவிடவில்லை; சென்ற தேர்தலின் போதே, காங்கிரசிடம் நம்பிக்கை இல்லை என்பதுதான் அறிவிக்கப்பட்டுவிட்டது!

வலையவைத்தும் வலை வீசியும், வழியே நின்று குழைந்தும் வாசனை பூசியும், 'இரவல்களை' இழுத்துக் கொண்டு, இவர்களின் ஆட்சி அமைக்கப்பட்டதே தவிர, பெருவாரியாக வெற்றி பெற்றதால் அல்ல! வெட்கித் தலைகுனிந்து, வியர்த்து வெடவெடத்துக் கிடந்தனர் அந்த நாட்களில், இப்போது ஏதோ வீரப்புப் பேசுகிறார்கள்—ஒரு கை பார்ப்போம் என்கிறார்கள்! கை வண்ணம் கண்டோமே முன்போர் முறை!

ஆகவே, தம்பி, தூய உள்ளத்துடனும், முடிவு பற்றிய கவலையற்றும், நாம் இந்தத் தேர்தலில் ஈடுபடுகிறோம்.

'மக்களிடம் சென்று கூறுவோம், இந்த ஆட்சி—
நம்பினோரை நட்டாற்றில் விட்டுவிட்டது.
நலிந்தோரைக் காப்பாற்றத் தவறிவிட்டது.

வளையவைத்து, வலைவீசி, வழியே நின்று....

நேருவின் புகழொளியைக் காட்டுகிறதே தவிர, மக்களின் வாழ்விலே ஒளி இல்லை.

முதலாளிமார்களின் முகாமாகிவிட்டது!

பேசுவது 'ஆவடி', கிடப்பதோ முதலாளிகளின் காலடி!!

வளமெல்லாம், தொழிலெல்லாம் வடக்கே; வறுமை நெளிவது தெற்கே, என்ற முறையில் ஆட்சித் திட்டம அமைந்து கிடக்கிறது, எனவே இது அடிமைகளின் கூடாரமாகி விட்டது, இதனை சென்ற கிழமை நிதி அமைச்சரே, தூத்துக்குடியில் பேசியுமிருக்கிறார்.

தமிழருக்கு உரிய தேவிகுளம், பீர்மேடு பறிக்கப் பட்டு விட்டது; தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்து கொண்டு நடத்தப்படும் துரைத்தனம் இது.

வடக்கெல்லைப் பிரச்சினைக்கு இன்றுவரை நியாயம் காண முடியாமல் திண்டாடுகிறது இந்தத் துரைத்தனம்.

தம்பி! இந்த அவலட்சணம் அனைத்தும், அம்பலமாகி, இல்லமெல்லாம், இதயமெல்லாம் உண்மை சென்று தங்கிட வேண்டும், நமது தேர்தல் நோக்கம், 'இதுதான்', இதிலே நமக்கு, 'நாடகம்' கருவியாகிறது; எனவேதான் நாடகமாடிகளா!! என்று ஏசுகிறார்கள்; ஏசட்டும்!

உலகில் பல்வேறு இடங்களிலே அமுலில் இருக்கும், முற்போக்குத் திட்டங்களை, மக்கள் மன்றத்தில் எடுத்துரைப்போம்.

எத்தகைய முற்போக்குத் திட்டத்துக்கும் இடமளிக்காத போக்கிலே, இவர்களின் ஆட்சி முறை இருப்பதை எடுத்துக் காட்டுவோம்.

ஏழெட்டு ஆண்டுகளாக இவர்களின் ஆட்சியிலே யார் இலாபம் பெற்றார்கள், எவருடைய கரம் வலுத்தது என்பதை எடுத்துக் கூறுவோம்.

இல்லாமையால் ஏழை மக்கள் இடர்ப்படுகிறார்களே, அதனை உலகறியச் செய்வோம்.

இலண்டனிலும் பாரிசிலும், நேருவுக்குப் பழரசம் தருகிறார்களே, அதேபோது, இலங்கையில் தமிழரின் இரத்தத்தைக் குடிக்கும் ஓர் கொடிய ஆட்சி நடக்கிறதே, கேட்டவர் யார்? ஏன் உள்ளம் துடிக்கவில்லை? உணர்வு ஏன் பிறக்கவில்லை? என்று கேட்போம்; ஓட்டுக் கேட்கக் காங்கிரசார் வருகிற இடமெல்லாம், இரத்தக்கரையைக் கழுவினீர்களா? என்று மக்கள் இவர்களைக் கேட்கப்போகிறார்கள்.

எனவே, தம்பி! நண்பர்களுடன் கலந்து பேசி நமது தேர்தல் பிரச்சார முறைபற்றிய திட்டம் வகுத்துக்கொண்டு, தலைமைக் கழகத்துக்கும் தெரியப்படுத்து.

அண்ணா! எல்லாம் சரி! பணம்?—என்றுதானே கேட்கிறாய்.

பணத்துக்கு என்னடா தம்பி குறை!! கள்ளங்கபடமற்ற உள்ளம் படைத்த உன் ஒரு சொட்டு வியர்வை, ஓராயிரம் ரூபாய்க்குச் சமமாயிற்றே! இலட்சியத்திலே அசைக்கொணாத நம்பிக்கை கொண்டுள்ள உன் ஒரு சொல், ஒரு சொற்பொழிவல்லவா! உன்னிடம் உள்ள 'திறமை' பயன்பட்டால் போதும், பேழையை நம்பியே தேர்தலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பு நம்மை ஏதும் செய்து விடாது!

தம்பி, இன்றிலிருந்து தேர்தலுக்காக இது என்று, நீ, ஒதுக்கிவைக்க வேண்டும்; உன் வாழ்க்கைக்காகச் செலவிடப்படும் தொகையிலே ஓர் பகுதியை!

வீட்டுக்கு வீடு, வேளைக்கு வேளை ஒரு பிடி அரிசி! கேலியல்ல! உன் காணிக்கை அதுவாக இருக்கும் என்றால் மகிழ்கிறேன், பெருமைப்படுகிறேன், சேமித்து வை.

செலவாகும் ஒவ்வோர் ரூபாயிலும் ஒரு அணா— தேர்தல் செலவுக்கு என்று எடுத்து வை! இன்றே துவக்கு. இனிதே, வெற்றி கிடைக்கும்.

பதின்மர், இருபதின்மர் கூடிடும் போதும், அதனைப் பயனுள்ள கூட்டமாக்கிக்கொண்டு காங்கிரசாட்சியின் கேடுகள் குறித்த தகவல்களை எடுத்துக் கூறு.

வசதி கிடைக்கும்போதெல்லாம், துண்டு வெளியீடுகள் பரப்பு!

எவர் செவியிலும், நமது கொள்கை புக வேண்டும்!

அங்காடியை மறவாதே. அறநெறியினின்றும் பிறழாதே.

ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ளாதே, ஆத்திரத்துக்கு இடமளித்துவிடாதே!

ஏசினால், கோபம்கொள்ளாதே — எவர் இதயத்திலும் நமது நோக்கம் சென்று தங்கவேண்டும்—கோபம் நம்மைக் குறுக்கு வழி இழுத்துச்சென்றுவிடும்.

தலைமைக் கழகம், விரைவில் தேர்தல் திட்டம் பற்றிய விளக்கம் அளிக்கும்.

அதுவரையில் செயலற்று இருக்கவேண்டும் என்பதல்ல, தலைமைக் கழகம் எவ்வகையில் திட்டங்கள் தீட்டவேண்டும் என்பதற்கான கருத்தினை வழங்க வேண்டுகிறேன்.

கோடீஸ்வரர்களும், இலட்சாதிபதிகளும், ஆலை அரசர்களும் வணிகக்கோமான்களும், நிலப்பிரபுக்களும் வட்டிக்கடை வேந்தர்களும், காங்கிரஸ் சார்பில் தேர்தலில் ஈடுபட்டு, பணத்தை வாரி வாரி இறைக்கப் போகிறார்கள்—தெரிகிறது'—எனினும் எனக்கு இருக்கும் தைரியத்துக்குக் காரணம், நம்மிடம் உள்ள செல்வம் சாமான்யமானதல்ல என்ற எண்ணம்தான்! வைரம் பாய்ந்த நெஞ்சமல்லவா உனக்கு, தங்கக் குணம் படைத்த தம்பி! ஊரை அடித்து உலையில்போடும் உலுத்தர்களை முறியடிக்க, உன் உழைப்பும் எழுச்சியும் போதும்! உழைப்பே செல்வம் என்பது உலகறிந்த உண்மையல்லவா?

அண்ணன்,

அண்ணாதுரை

(15—7—56 திராவிட நாடு இதழில்)

அடுத்த கிழமை!

நாடகமாடிடலாம்.....!

என்ற தம்பிக்கு மடல் வெளியாகிறது.

ஆலயத்தின் அடிக்கல்

ஜெ. வி. நாதன்.

அண்ணனும் அண்ணன்!

கடந்த சில நாட்களாக அண்ணுவின் போக்கு சரிவரப் புரியவில்லை. அண்ணு எங்கே போகிருன், என்ன செய்கிருன்? ஒரே மர்மமாக இருக்கிறது. தொழிற்சாலை சங்கு காலை 8 மணிக்கு ஊதுவதற்கு முன்பு அவசர அவசரமாகப் புறப்படுவான். மாலை 5 மணிக்கு வேலை முடிந்து வழக்கம்போல் வரவேண்டிய அண்ணு, சில நாட்களில் வருவான்; சில நாட்களில் இரவு முழுவதும் எங்கோ சுற்றியலைந்துவிட்டு விடியற்காலையில் 3 மணிக்கு சிவந்த கண்களும், கலைந்த தலையுமாகப் பயங்கரமான தோற்றத்துடன் வந்து சேருகிருன். எனக்கு அவனைப் பற்றிக் கொஞ்சம் பயமாகவே இருக்கிறது.

அண்ணன் சக காலிகளுடன் சேர்ந்துகொண்டு பேட்டையிலுள்ள பெண்களைச் சீண்டுவதும், யாரிடமாவது வீண்வம்பு வளர்ப்பதுமாகப் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்த சமயத்தில் அப்பா திடீரென்று மண்டையைப் போட்டார். குடும்பப் பொறுப்பு முழுவதும் அண்ணன் தலையில் தான் விழுந்திருக்கிறது. அம்மாவைத் தவிர, இரண்டு சகோதரிகளையும், இரண்டு தம்பிகளையும் பெற்றிருக்கும் எங்கள் குடும்பம் அண்ணுவின் கை ஒன்றையே நம்பியிருக்கிறது. எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது. அண்ணு கெட்டலைந்து போய், குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்திவிடுவாஞே?

அண்ணுவின் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் லோகநாதனின் மனைவி அம்பிகா, வீட்டுக்கு வந்திருந்தாள். பேசினுல் நேரம் போவதே தெரியாமல் அப்படிப் பேசத் தொடங்கி விடுவாள் அம்பிகா. பேச்சின் நடுவே, "கோமதி! உங்க அண்ணுவைப் பற்றி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்......" என்று ஆரம்பித்தாள். நான்நிமிர்ந்து உட்கார்ந்தேன். அம்மாவும் காதைத் தீட்டிக்கொண்டாள். ஆனுல் அம்பிகா, "ஐயையோ! அவர் உங்ககிட்டே எதையும் சொல்லி மன வருத்தம் ஏற்படுத்தக்கூடாது என்று சொன்னுரே, உங்ககிட்டே சொல்லிட்டேன்னு தெரிஞ்சால் என்னைக் கொன்னுப்புடுவார்!" என்று கூறிவிட்டு விடுவிடென்று எழுந்து சென்றுவிட்டாள்.

திக்பிரமையோடு அமர்ந்திருந்தாள் அம்மா. என் கண்களில் நீர் வழிந்தது! என் முன்னே பயங்கரப் பிரச்னைகள் பல விரிந்து கிடந்தன.

எதிர்வீட்டில் குழந்தைகள் மத்தாப்புக் கொளுத்துகிருர்கள்; தெருவில் வெடி வெடிக்கிருர்கள். தங்கை ஜெயாவும், தம்பிகள் மோகனும் ராஜுவும் ஏக்கத்தோடு, அங்கே ஒளிரும் சுடர்ப் பொறிகளைக் கவனிக்கின்றனர்.

"அம்மா, அம்மா! எனக்கு கேப் பெட்டி, கம்பி, மத்தாப்பு, யானை வெடி எல்லாம் வாங்கித் தர்றயாம்மா?" என்று ஆவலோடு மோகன் அம்மாவைக் கேட்கிருன் "ஆகட்டுமடா கண்ணு. அண்ணன் வரட்டும். உனக்கும் நிறைய வாங்கித் தரச் சொல்கிறேன்" என்று அம்மா கூறிவிட்டுத் திரும்பி குழந்தைகளுக்குத் தெரியாமல் கண்களில் கசிந்த நீரைத் துடைத்துக் கொள்கிருள்,

அம்மாவுக்கு அப்பாவின் நினைவு வந்திருக்கும். அப்பா இருந்தால் வீடு இந்த நிலையிலா களையிழந்து போய் வெறிச்சோடி நிற்கும்? தீபாவளிக்கு இருபது நாட்களுக்கு முன்பே வீடு பரபரப்பில் ஆழ்ந்து விடாதா? கலகலப்புத் துவங்கி விடாதா? பலகாரங்கள், துணிமணிகள்; பட்டாசுகளால் வீடே நிறைந்து விடாதா? அவர் போய்விட்டார். கூடவே வீட்டின் லட்சுமி களையும் அகன்று விட்டது.

அண்ணன்! — அவனுக்கு ஏன் புத்தி இவ்வாறு செல்லவேண்டும்? தீபாவளிப் பண்டிகை வருகிறது. குழந்தைகளுக்குப் பட்டில் இல்லாவிட்டாலும், சீட்டித் துணியிலாவது சட்டைகள் எடுக்கக்கூடாதா? பொறுப்பில்லாமல் சுற்றிச் சுற்றி வருகிருனே? இவன் தொழிற்சாலைக்குக்கூடப் போகிருஞே, இல்லை, வேறு எங்காவது ஜமா சேர்த்துக் கொண்டு ஊர் சுற்றப் போகிருஞே? யாருக்குத் தெரியும்? பேட்டையிலே அண்ணன் பெரிய வஸ்தாது. அவன் கூட சுற்றித் திரியும் விடலைகள் பலர். அண்ணன் பெயரைக் கேட்டாலே பலருக்குக் கொஞ்சம் நடுக்கம்தான்! அப்படி காலிகளுடன் சேர்ந்துகொண்டு கொட்டமடித்து விட்டு வருகிருன் இந்த அண்ணன், உம், அப்படித்தான் இருக்க வேண்டும்!

தீபாவளியன்று மற்றக் குழந்தைகளெல்லாம் புத்தாடை உடுத்தி, பூவானம் கொளுத்தி, குதூகலத்துடன் தீபாவளியைக் கொண்டாடும்போது நம் குழந்தைகள் ஏங்கிப் போய் நிற்குமே என்ற கவலை— பொறுப்பு கொஞ்சமாவது வேண்டாமோ?

"அவன் என்னடீ செய்வான் கோமதி? பாவம், கொடுக்கிற சம்பளத்தை அப்படியே கொண்டுவந்து கொடுத்திடருன், தீபாவளிக்கு, ஆயிரம் செலவுகள் இருக்கும்தான். ஆனுல் பணத்துக்கு எங்கே போவது?" என்ருள் அம்மா. விட்டுக் கொடுத்துப் போகிருளா, பாருங்கள்! மகன்மேல் அவ்வளவு பாசம்— நம்பிக்கை! அந்த நம்பிக்கையில் மண் விழப் போகிறது என்பதை அவள் அறிந்தால்...?

* * *

தீயை வாரி என் முகத்தில் கொட்

டியதுபோல் துடித்தேன். என் உள்ளம் 'ஓ'வென்று அழுதது. "அண்ணா... அண்ணா! நீயா இப்படிப் பேசுகிறாய்? இல்லை! என் அண்ணன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளாக இவை? இருக்கவே முடியாது! அண்ணா... உன் தங்கைக்கு—ஆசையுடனும் பாசத்துடனும் 'கோமதிக் கண்ணு'... என்று செல்லமாய் உறவாடி நீ அன்பு செலுத்திய எனக்கு, உன்னைப் பற்றிக் கேட்கும் உரிமை கூட இல்லையா, அண்ணா!"—கண்ணீருடன் புலம்பினேன்.

நடந்தது இதுதான்:

வழக்கம்போல திருட்டுவிழி விழித்துக்கொண்டு அம்மா தூங்குகிறாளா என்றுபார்த்துவிட்டு மெல்ல நடந்து தன் அறைக்குள் நுழைந்தான் அண்ணன். அப்போது இரவு மணி மூன்று. எனக்கு உள்ளம் துடித்தது. இன்று எப்படியும் உண்மை தெரிந்தேயாக வேண்டும். ஆத்திரத்தால் பரபரத்த இதயத்தை அடக்கிக் கொண்டேன். பொழுது விடிந்ததும் ஆத்திரம் வெடித்து வார்த்தைகளாக வெளிவந்தது. கோபத்தில் கத்தினேன். "கொஞ்சங்கூட பொறுப்பில்லாமல் சுற்றிச் சுற்றி வந்தால் எப்படிக் குடும்பம் நடத்துவது? தீபாவளிக்கு இன்னும் நாலுநாள்கூட இல்லை. காலிப் பயல்களோடு சேர்ந்து கொண்டு அரட்டை யடித்தபடி ஊரைச் சுற்றி வந்தால் போதுமா?..."

"கோமதி!" — அதட்டல் போட்டான் அண்ணா. பேச்சை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தேன். "நீ உன் வேலையைக் கவனி. இது என் சொந்த விஷயம். இதில் நீயோ, இல்லை, யாருமோ தலையிடுவதை நான் விரும்பவில்லை. தெரிகிறதா?" —வெறி பிடித்தவன் ஆவேசங் கொண்டு கத்துவானே, அதைப் போல் உறுமிவிட்டு அண்ணா எங்கோ வெளியே சென்றுவிட்டான். கண்ணிலே நீர் வழிய சூன்யத்தை வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்தேன். அண்ணாவா இப்படிப் பேசினான்?—என்னால் நம்பவே முடியவில்லை. எப்படி யிருந்தவன் இப்படி மாறிவிட்டானே, ஐயோ கடவுளே!

"அக்கா, அக்கா! எனக்குப் பட்டுப் பாவாடை, புது சட்டையெல்லாம் அண்ணன் வாங்கிட்டு வருமா? எதிர் வீட்டு உமா தீபாவளிக்கு எடுத்திருந்த துணியெல்லாம் என்னிடம் காட்டினாள். எவ்வளவு அழகாயிருக்குது, தெரியுமா? — தங்கை ஜெயா சமயா சந்தர்ப்பம் தெரியாமல் கேட்டாள்.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "போடீ உள்ளே! யார் என்ன வாங்கினால் உனக்கென்ன?" என்று கூச்சல் போட்டேன். முகம் சுண்டிப்போய், ஏக்கத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டே ஜெயா உள்ளே திரும்பினாள். 'சே, எனக்கு என்ன பைத்தியமா? யார் மீதோ உள்ள ஆத்திரத்தை இந்தக் குழந்தையிடம் காட்டுகிறேனே?"

ஓடிப்போய் ஜெயாவைக் கட்டியணைத்துக்கொண்டு கதறியே விட்டேன். "நிச்சயம் பட்டுப்பாவாடை, புதுச்சட்டை யெல்லாம் உனக்குக் கிடைக்குமடி, ஜெயா, நீ கேட்டபடி மத்தாப்பு, பூவாணம், சங்கு, சக்கரம், வெடி, எல்லாம் கிடைக்கும். நீ கவலைப்படாதே!" என்றேன்.

"நிசமாகவா, அக்கா? யார் வாங்கித் தருவார்கள் அதையெல்லாம்? நீயா, இல்லை அண்ணாவா?"

"ஊஹூம், அண்ணனும் இல்லை, அக்காவும் இல்லை. கடவுள்! சாமி கிட்டே வேண்டிக்கோ, ஜெயா, நிச்சயம் நமக்கு வேண்டியதை யெல்லாம் அவர் கொடுப்பார்."

அடுத்த நொடியில் ஜெயா முருகன் படத்தடியில் போய் நின்றாள். "முருகா! எல்லார் வீட்டிலேயும் கொண்டாடறது மாதிரி எங்க வீட்டிலேயும் தீபாவளி கொண்டாடணும். நீதான் வேண்டியதை யெல்லாம் எங்களுக்குக் கொடுக்கணும் —" என்று சொல்லி வணங்கினாள். அதைப் பார்த்து மெய்சிலிர்த்து நின்றாள் அம்மா. 'முருகன்தான் நம்ம குடும்பத்துக்கு வழி காட்டணும்; கவலையைப் போக்கணும்" என்று பெருமூச்சுடன் அவன்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அடுப்

கலகலத்து சரியுதம்மா!

மதுச்சேரி புதுச்சேரி! ஆத லாலே
மக்களெல்லாம் மதிசோர்ந்து கிடப்பா ரென்று
புதுச்சேரி புறப்பட்டோம்! வெற்றி காண
போர்க்கோலம் பூண்டிட்டோம்! பொய்யு ரைத்தோம்!
பொதுவாழ்வின் முழுவடிவை, புத்தர் போல
புகழெடுத்த அண்ணாவைத் திட்டித் தீர்த்தோம்!
புதுச்சேரி மக்களதைப் பொறுக்க வில்லை!
புழுதியிலே விட்டெறிந்தார்! இலைக ளானேம்!!
அடியென்றோம்! உதையென்றோம்! ஆள்க டத்தல்
அத்தனையும் செய்துவைத்தோம்! நெருப்பும் வைத்தோம்!
குடிமக்கள் 'குடி'மக்கள் என்றே எண்ணி
குடியென்றோம்! குடங்குடமாய்க் கொடுப்போம் என்றோம்!
பிடியென்றோம் பணம்கொடுத்தோம்! நாகர் கோயில்
பாடத்தை அளிக்கும்படிக் கேட்டுக் கொண்டோம்!
விடைஎன்ன? கூட்டணிக்கே வெற்றி என்றார்!
வேதனையில் எதைச்சொல்லி அழுவ தம்மா!
கொட்டிவைத்த கல்லென்றார்! கண்ணி யத்தின்
காவலனும் பேரறிஞர் அண்ணா! மக்கள்
கட்டிவிட்டார் கோபுரத்தைத் தமிழ கத்தில்!
கலசமென புதுச்சேரி வெற்றி வைத்தார்!
கட்டிவைத்த கோபுரமாம் நமது கட்சி
கலகலத்துச் சரியுதம்மா! வாய்க்கொ ழுப்பில்
திட்டிவந்த நாக்கிற்கும் சூடு போட்டார்!
தேம்பியழ விட்டுவிட்டார் ஐயோ! அம்மா!!
அண்ணாவின் மறைவோடு கழக ஆட்சி
அழிந்துவிடும் ஒழிந்துவிடும் என்றோம்! அந்த
மன்னுதி மன்னனுக்கு வெற்றி என்ற
மாலையிட்டு வணங்குகின்றார் புதுவை மக்கள்!
கண்ணீரின் மலரெடுத்து காஞ்சி மன்னன்
கல்லறையை வணங்கிடுவோம்! கழக ஆட்சி
அண்ணாவின் வழிநடக்க ஒத்து ழைப்போம்!
ஆணவத்தை அகற்றிடுவோம்! திருந்தி வாழ்வோம்!!

புலவர். மணிமுடிச் சோழன்.



பறைக்குள் நுழைந்துவிட்டாள் அவள்.

"அக்கா...அக்கா!..." எதிர் வீட்டுப்பையன் முத்து பதற்றத்தோடு ஓடிவந்தான். இரைக்க இரைக்க அவன் கூறிய செய்தி...?

"உங்க அண்ணன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிருராம். எங்கவீட்டுப் போனில் இப்போதான் செய்தி வந்தது. உங்ககிட்டே சொல்லும்படி கோடிவீட்டு லோகநாதன் அண்ணன்தான் டெலிபோன் செய்துச்சு!"

"என்ன? அண்ணன் அடிபட்டாரா? எங்கே? எப்போது?–உடன் பிறந்த பாசம் துடிக்கவைத்தது. அண்ணனுக்கு ஆபத்து என்றதும் நெஞ்சு பதறியது. அம்மா ஒன்றும் புரியாமல் கலங்கி நின்ருள்.

"அண்ணு!" என்று கத்திக்கொண்டே ஓடினேன், தெருவில் நான் பதற்றத்தோடு விரைந்தபோது பல கண்கள் வேடிக்கைப் பார்த்தன. வெறிபிடித்தவளாய் ஓடி ஆஸ்பத்திரியை அடைந்தபோது வாசலில் லோகநாதன் — அண்ணனின் நண்பர் நின்றிருந்தார். இருவரும் உள்ளே சென்ருேம்.

அண்ணு மண்டையில் பலத்த கட்டுடன் படுத்திருந்தார். குளுகோஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கண்களைத் திறக்கவேயில்லை. வாய்விட்டு அலறியிருப்பேன். "உஸ்...! இங்கே சப்தம் போடக்கூடாது" என்று நர்ஸ் எச்சரிக்கவே, லோகநாதனுடன்வெளியே வந்தேன். "அண்ணுவுக்கு எப்படி அடிபட்டது?" என்று அழுதுக்கொண்டே கேட்டேன். அவர் கூறினர்;

"உங்க அண்ணன் ஒரு முட்டாள். எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்து விட்டேன். கேட்டால்தானே? பகலில் உயிரை விட்டு உழைப்பது போதாதென்று, 'நைட் ஷிப்'டிலும் வந்து வேலை செய்தான். இரவுபகலாக பிசாசு போல உழைத்தான். காரணம் கேட்டதற்கு, 'என் குடும்பத்திலும் தீபாவளியை சிறப்பாகக் கொண்டாட வேண்டாமா, லோகு? என் தங்கை ஆசைப்பட்ட பட்டுப் புடவை வாங்க வேண்டும். மற்ற வீட்டுக் குழந்தைகளைப் பார்த்து நம் குழந்தைகளை ஏங்க விடலாமா?" என்கிருன். இரவு பகல் ஓய்வு ஒழிச்சலின்றி வேலை பார்ப்பதற்கு மனித உடம்பு இரும்பில்லையே. இன்று காலையில் வரும்போதே ஜுரமடித்தது அவனுக்கு. வேலை கிடக்கட்டும். வீட்டுக்குப் போய்படு! என்றேன், "வீட்டிலே தங்கையை இத்தனை நாளில் கடுமையாக ஒரு வார்த்தைகூடப் பேசினதில்லை. இன்று பேசிட்டேன். மனமே சரியில்லை. அதுதான் அதிர்ச்சியில் ஜுரம் அடிக்கிறது போலிருக்கிறது. இந்தக்கட்டு வேலையை மட்டும் முடிச்சுட்டு வீட்டுக்குப் போயிடறேன்!" என்று சொன்னுன் பாவிப் பயல். ஜுர வேகத்தில் உருக்கு இயந்திரத்துக்கு நடுவே தலையை நீட்டிவிட்டான் ஆண்டவன் புண்ணியத்தில் உயிருக்கு ஆபத்தில்லைன்னு டாக்டர் சொல்லிட்டார், மண்டையில் பெரியகாயம்! ரத்தம் நிறைய வழிஞ்சுடுச்சு! இரவிலும் வேலை பார்ப்பதை உங்ககிட்டே அவன் சொல்லவில்லை; என்னையும் சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொண்டான். ஏனென்ருல் எங்கே நீங்க தடுத்து, போகவேண்டியதில்லை என்று கூறிவிடுவீர்களோ என்று அவன் ரொம்பவும் பயந்தான். இரவு பகலா உழைத்த பணமெல்லாம் என்கிட்டே கொடுத்து வைச்சிருக்கான். இப்போ முதலாளி அவன் அயராத உழைப்பைக் கண்டு வேலை உயர்வு கொடுத்திருக்கார். தீபாவளி போனசும் கொடுத்திருக்கிருர்!"

"ஐயோ, அண்ணு! உன்னைப் போய்த் தப்பாக நினைத்தேனே, பாவி! நீ ஒரு தெய்வம் அண்ணு, தெய்வம்! தெய்வத்தின் செயலை மனிதர்கள் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? உன் புதிரான செயலை எங்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஐயோ, கடவுளே! எங்க அண்ணனைக் காப்பாற்று, அவர் என் அண்ணன்! அவரை என்னிடம் கொடுத்துவிடு. எங்களைப் பிரித்து விடாதே!" என்று மனதுக்குள் அலறினேன்.

ஆஸ்பத்திரிச் சுவரில் ஒரு வாக்கியம் காணப்பட்டது ஆங்கிலத்தில் 'தியாகிகளின் இரத்தம்தான் ஆலயத்தின் அடிக்கல்.'

கண்ணீர் வழிய அந்த வார்த்தைகளைப் படித்தேன். பளிச்செனப் புலப்பட்டது ஒரு விஷயம்.

"ஆமாம்; தான் அழிந்து மற்றவர்களுக்கு மணம் பரப்பும் சந்தன மரத்தைப் போன்றவர் என் அண்ணு என்ற அன்புத் தெய்வம். என் அண்ணுவின் இரத்தம்தான் எங்கள் குடும்பம் என்னும் ஆலயத்தின் அடிக்கல்!"

●

★★★★★★★★★★★★★★

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் மார்ச்சு மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித்தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3

★★★★★★★★★★★★★★

இருதயத்தில் ஓர் ரோஜா

முல்லை. சக்தி

[5]

ஏரி நட்சத்திரம்போல் ஜொலித்துக் கொண்டிருந்த காரிகையைக் கண்டதும் ஆனந்த் திடுக்கிட்டான்.

அந்தப் பெண்ணோ கோர்த்த முல்லைச் சரம் போன்ற பற்களைக் காட்டிச் சிரித்துக்கொண்டிருந்தாள்!

'பெண்களின் சிரிப்புக்குப் பின்னால் பயங்கர ஆபத்து மறைந்திருக்கும் என்று எங்கேயோ படித்தது ஆனந்தின் நினைவுக்கு வந்தது!

பரமசிவன் சிரித்தபோது பூமண்டலம் முழுவதும் ஆட்டமகொண்டதாமே. அதுபோல் இவளின் சிரிப்பால் தன் வாழ்வே ஆட்டம் கொள்ளுமோ என்று எண்ணி நடுங்கினான்.

'என்ன அத்தான்! தேடி வந்தவளை வா என்றுகூட அழைக்காமல். பிரமித்து நிற்கின்றீர்களே,' என்றாள் அவள்!

'உன்னை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை. அதனால் உன்னைக் கண்டதும் நான் திகைத்துவிட்டேன்' என்றான் ஆனந்த்!

'என்னை எதிர்பார்க்கவில்லை; ஆனால் வேறு யாருக்காகவோ காத்துக்கொண்டிருந்தீர்களா?''

'சேச்சே......என்னைத் தேடிக் கொண்டு யார் வரப் போகிறார்கள்?'

'யாருக்குத் தெரியும்? உங்கள் இதயத்தின் இரகசியத்தை நான் எப்படி அறிவேன்?'

'என் இதயத்தில் இரகசியம் இல்லை; ஆகவே என் வார்த்தைகளில் பொய் இல்லை!''

'உங்கள் இதய சிம்மாசனத்தில் தான் ஒரு பெண் சிரித்துக்கொண்டிருக்கிறாளே...!''

'என் இதயத்திலா? ஒருபெண்ணா? என்ன...விளையாடுகிறாய்... ஜோதி?'

'இத்தனை நாள் என்னை ஏமாற்றியது போதும் அத்தான்—போதும்! எனக்கு எல்லாம் தெரியும்...ஒன்றே ஒன்றுமட்டும் சொல்லுங்கள். அவள் யார்? அவள் என்னைவிட எந்த விதத்தில் உயர்ந்தவள்?''

''ஜோதி! வீண் வம்பை வளர்க்காதே...'' 'வம்பை வளர்ப்பது நான் அல்ல; அர்த்தராத்திரியில்...அகால வேளையில்...சாலையிலே......வம்பை விலைகொடுத்து வாங்கி......கல்லூரியிலே தலை குனிந்து நின்றது நீங்களா? நானா?

இதனைக் கேட்டதும் தீப் பந்தத்தை தன்மேல் யாரோ வீசுவது போல் இருந்தது ஆனந்துக்கு! எதிர்பாராத இடத்திலே இருந்து எதிர்பாராத தாக்குதல்!

ஜோதி ...முழு விபரமும் தெரியாமல் என்மேல் குற்றம் சாட்டாதே! அது நடந்து முடிந்துபோன சோக வரலாறு!'

'ஏன் உங்கள் சுவையான காதல் வரலாறு, சோகத்தில் முடிந்து விட்டதா?'

'ஜோதி.........உனக்கு 'காத'லையன்றி வேறு ஒன்றும் தெரியாதோ?'

'மலர் சிரிக்கின்றது; மயில் ஆடுகிறது; குயில் பாடுகிறது......அதே போல்தான் கன்னியின் மனமும் மலர்கிறது காதலால்...'

ஜோதி... பலமுறை உன்னிடத்தில் நான் சொல்லிவிட்டேன்...... என் கல்லூரி வாழ்வு முடியும் மட்டும் என் உள்ளத்தில் படிப்பைத் தவிர வேறு எண்ணத்திற்கு இடமே இல்லை என்று... மீண்டும் மீண்டும்...நீ...

'அத்தான்! ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள்...நான் காலமெல்லாம் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்'

'ஜோதி! காதல் கடைச் சரக்கல்ல—கேட்டவுடன் கொடுப்பதற்கு!'

'தெரியும். ஆனால் யார்யாருக்கோ கேட்காமலேயே கொடுக்கிறீர்களே ...அதனை எனக்கும் கொடுக்கக் கூடாதா?'

ஜோதி! மீண்டும் அதை கிளறாதே; அது வேறு விஷயம்...

'அத்தான்! நான் உறவு முறையை வைத்து உங்களைக் கேட்கவில்லை; சின்னஞ்சிறு வயதில்—அறியாப் பருவத்தில்—மணல் வீடு கட்டி விளையாடினோமே அந்த உரிமையோடு கேட்கவில்லை. நான் உங்களை மனப்பூர்வமாக நேசிக்கிறேன்; விரும்புகிறேன்...காத...!'

'ஜோதி.........தவறாகவோ, சரியாகவோ என் இதயத்தில் உன்னைப் பற்றி அந்த நினைவே எனக்கு வரவில்லை. என்னை மன்னித்துவிடு!

'ஏன் நான் அழகாக இல்லையா? என்னை ஏன் நீங்கள் விரும்பமாட்டேன் என்கிறீர்கள்'

'அது எனக்கே புரியவில்லை ஜோதி...நீ அழகிதான்! என் அத்தை மகள் தான்......ஆனால் ஏனோ...... ஏனோ......!'

எனக்குத் தெரியும்...உங்கள் மனதில் வேறு யாரோ குடியிருக்கிறாள் ...அந்த மயக்குக் காரியின் போதை உங்கள் கண்களை மறைக்கிறது. அதனால்தான் நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள்!

'இன்றுவரை அப்படி யாரும் என் இதயத்தில் இல்லை...ஆனால் காலம் யாரையாவது அழைத்துவந்து என் இதய வீட்டில் அமரச் செய்தால் நான் என்ன செய்ய முடியும்?'

'அப்படி என்றால்...'

'என்னை மறந்துவிடு என்று அர்த்தம்; இப்படி என்னைத் தேடிவராதே என்று பொருள்...'

இனி உங்களை நான் தேடி வர மாட்டேன்; ஆனால் என்னை நீங்கள் தேடிவரும் நாள் வெகுதூரத்தில் இல்லை!'

'அந்த துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்படாதென்று நான் நினைக்கிறேன்...'

'நானும் அதனையே விரும்புகிறேன்...ஆனால் ...நொந்துபோன என் இருதயம் என்னென்ன விந்தைகள் புரியுமோ ...... அதற்கு நான் பொறுப்பாக இருக்க முடியாதல்லவா......?

'நீ என்ன சொல்கிறாய் ஜோதி...? உள்ளத்தைத் திறந்து, இதயத்தின்

இரகசிய மலர்களை எல்லாம் உங்கள் காலடியில் கொட்டி அர்ச்சித்த என்னை, நீங்கள், அவமானப்படுத்தி விட்டீர்கள்! அதற்கு நான் பழிவாங்காமல் விடமாட்டேன்! ஒரு நாள் வரும்... அன்று நீங்கள் என் காலடியில் உங்களது கண்ணீர் மலர்களைக் கொட்டத்தான் போகிறீர்கள்...!

'நடக்காது...ஜோதி...நடக்காது.. என வாழ்வே பாழானாலும்—என் உயிரே போவதானாலும், நான் அதைச் செய்யவே மாட்டேன்'

'பார்ப்போம்! கல்லூரியில் அவமானப்பட்டீர்களே! அதை உங்கள் தந்தைக்கு எழுதுகிறேன்......உங்களது முகத்திரையைக் கிழிக்கிறேன்! உங்கள்மேல் தனது பாசத்தையும், நேசத்தையும் பொழிந்துக் கொண்டிருக்கும் உங்கள் தந்தை—உங்கள் மேல் பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் உங்கள் தெய்வம்...அவமானத்தால் அணு அணுவாகச் சாகச் செய்கிறேன்...

'ஜோதி...ஜோதி...அதை மட்டும் செய்யாதே ......என்னை என்ன வேண்டுமானாலும் செய் ... ஆனால் என் தந்தையை ...... அவர் மனம் நோகடிக்காதே!'

'என் வாய்க்கு நீங்கள் பூட்டுப் போட வேண்டுமானால், உங்கள் இதயத்தில் எனக்கு இடம் கொடுங்கள்'

'இதென்ன பேரம் ஜோதி...'

'அரசியலிலேயே பேரம் இருக்கும்போது வாழ்வில் பேரம் இருக்கக்கூடாதா...?'

'ஜோதி! என்னை வாட்டாதே! வதைக்காதே! நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்...'

'அத்தான்! அழித்தெழுதா சித்திரம்போல் என் இதயத்தில் நீங்கள் பதிந்துவிட்டீர்கள்! அதனை அழிக்கும் சக்தி ஆண்டவனுக்கே இல்லை! உங்களை அடைவதற்கு நான் எந்த வழியும் போகத் தயங்கமாட்டேன்! நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; நான் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு ஜோதி சென்றாள்!

ஆனந்தோ பதுமையாக நின்றான்!



வினா-விடை

1 1956க்குப்பிற்பட்ட அண்ணாவின் எழுத்தோவியங்களை மட்டும்தான் பிரசுரிக்க விருக்கிறீர்களா?

அப்படி யொன்றுமில்லை. அண்ணாவின் அனைத்து எழுத்தோவியங்களையுந்தான் பிரசுரிக்க விருக்கிறோம். அச்சேறாத இன்னும் பல கதை, கட்டுரைகள் கூட விரைவில் 'காஞ்சி'யில் வரவிருக்கின்றன.

2 காங்கிரசுக் கட்சிக்கென்று ஏடுகள், இதழ்கள் ஏதுமில்லையென்று கருத்திருமனார் கூறி இருக்கிறாரே, உண்மையா?

அவர் சட்ட மன்றத்திலேயே அப்படிக் கூறி இருப்பதனால் ஒத்துக்கொள்வோம். காங்கிரசின் பேரால் இயங்குகின்ற அந்த இதழ்களின் போக்கு காரணமாக எதிர்காலத்தில் 'ஜாமீன்' கட்டும் நிலை யேற்பட்டால், அப்போது இந்த கருத்திருமனார்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து முடிவெடுப்போம்!

3 தற்கொலைகள் அதிகமாவதன் காரணம் என்ன?

ஒரு வரியில் பதில் சொல்லக் கூடிய வினாவா இது? தன்னம்பிக்கை அற்றுப் போய்விட்டதன் அறிகுறிகள் தான் இவை!

4 அழகு ஆபத்தானதா? ரசிக்கக் கூடியதா?

அழகு, ரசிக்க மட்டுமே பயன் பட்டுக் கொண்டிருக்கிறவரையில் ஆபத்தானதல்ல!

5. தமிழ் 'உணர்வு'க்கும், தமிழ் 'அறிவு'க்கும் வேறுபாடுண்டா?

நிரம்ப உண்டு, 'நமஸ்காரம்' என்று சொல்வதை 'வணக்கம்' என்று சொல்வது உணர்வு. டால்மியாபுரம் என்பதை 'கல்லக்குடி' ஆக்கவேண்டும் என்பது தமிழ் 'உணர்வு'. சட்டம், விஞ்ஞானம் முதலான விவகாரங்களைக்கூட, ஐயந்திரிபு அற்ற முறையிலே விளக்கிக் காட்ட முடிகிற நிலைமை' 'தமிழ் அறிவு'. தமிழில் முடியாதது ஒன்றில்லை என்று, ஆக்கிக்காட்டுகிற ஆற்றல் 'தமிழ் அறிவு.' இப்போது நாம் பெற்றிருப்பது தமிழ் உணர்வுதான்! பெற வேண்டி இருப்பது தமிழ் அறிவு.

6 அண்ணா இரங்கற்பா ஒன்று அனுப்பி இருந்தேன். இதுவரையில் வெளியாகவில்லையே, ஏன்?

ஒரு வாரத்திற்கு வரும் ஐநூறு, அறுநூறு கவிதைகளையும் வெளியிட 'காஞ்சி'யில் இடமில்லையே!

7 இன்னமும் பஸ் போக்குவரத்து இழப்பில்தான் நடைபெறுகிறதா?

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த இழப்பில் பெரும் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத்தக்க தில்லையா!

8. 'வக்காலத்து' என்ற சொல் ஆட்சேபணைக்குரியது என்பதன் மூலம், வழக்கறிஞர்கள் இழிவு படுத்தப்படவில்லையா?

உண்மைதான், 'வக்காலத்து' என்றாலே ஒருவருக்காக இன்னொருவர் உதவுதல் என்ற பொருளில்தான், வழக்கறிஞர்களிடையே அச்சொல் பழக்கத்தில் இருக்கிறது. ஒருவர் சார்பாக இன்னொருவர் வாதாடுவதுகூட அச்சொல்லுக்குரிய பொருள்தான். காங்கிரசுக்காரர்கள் அந்த அளவுக்குத்தெளிவுடையவர்கள்என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

9. இப்போதைய கல்வி முறையை நீங்கள் வரவேற்கவில்லையா?

வரவேற்கத்தக்க கல்வி முறை இருக்கிறது என்பதுதான் உங்கள் வாதமா?

10. மாணவர்களுக்கென்று தனிச் சட்டங்கள் ஏதேனும் இருக்கிறதா?

எந்த ஒருவருக்கு என்றும், எந்த தனிச்சட்டமும் கிடையாது. பள்ளியிலே பயின்றுகொண்டிருக்கிற நேரம் வரையில் அவர்கள் மாணவர்கள்! பள்ளியைவிட்டு வெளியே வந்ததும் அவர்கள் பொதுமக்கள்! இந்த வேறுபாட்டை உணரும் நாளில்தான் அமைதி ஏற்படமுடியும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

நேரத்தில் விலகிக் கொண்டார். முன்னேற்பாட்டோடு கழகம் நடந்து கொண்டதால் குருசுக்குப்பம் தொகுதியில் கழக வேட்பாளராக தோழர் ஒருவர் நின்ருர்.

உப்பளத்தில் மருமகன் வெற்றிக்காக, 'எனது மருமகன் கருணாகரனுக்கு வாக்களியுங்கள்' என்று சுவரொட்டிகள் போட்டு வாக்குக் கேட்கும் அளவிற்குப் பாடுபட்டார்.

குருசுக் குப்பத்தில் கழக வேட்பாளருக்கு எதிராக நின்ற 'எல்லாம் உடையார்' ஒருவரை சுயேச்சையாக நிறுத்தி வேலை செய்தார்.

உழவர்கரைத் தொகுதி ஒரு வேடிக்கையான தொகுதி. அங்கு கழகமே வாழ்வு என்று வாழ்க்கையை அமைத்துக் கொண்ட, தொழிற் சங்கத் தலைவர், ஏழைமுத்து என்பவரைத் தோற்கடிக்க இதுவரை செய்யாத எல்லாத் திருவிளையாடல்களையும் நடத்தி, தன் ஆதரவாளரின் வெற்றிக்கு அலைந்தார், திரிந்தார்; அப்பப்பா! அப்படிப் பாடுபட்டார்.

நாடே எதிர்பார்த்த தொகுதி காலாப்பேட்டை தொகுதி. அங்கு கழக வேட்பாளர் திரு. பரூக் அவர்களைத் தோற்கடிக்க — பழிவாங்க என்றுகூடச் சொல்லலாம் — தன் படைகளோடு சென்ருர். அடி, உதை என்ற கதை மாறி குத்து, வெட்டு என்ற அளவில் 'காந்தீயம்' அங்கு கொலை செய்யப்பட்டது.

இங்கேதான் புதுவையில் புதுமை மலர்ந்தது. ஆம்! கழகத்திற்கென்று மாபெரும் மனித சக்தி உண்டு. அது, குபேரின் சக்தியல்ல, குபேர் ஒரு வெற்று வேட்டு அரசியல் வாதி என்ற உண்மையை நாட்டுக்கு அறிவித்துவிட்டு. மக்கள் குபேரின் ஆதரவாளர்கள் அத்தனைப் பேரையும் மண்கவ்வச் செய்தனர்.

உப்பளத்தில் கழகம் வென்றது; குபேரின் மருமகன் தோற்ருர்; காலாப்பேட்டையில் கழகம் வென்றது; குபேரின் ஆதரவோடுபோட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் தோற்ருர்; உழவர்கரையில் தொழிலாளியின் உருவில் கழகம் வென்றது; அங்கு குபேரின் துரோகம் தோற்றது,

காசுக் கடையில் குபேரின் ஆதரவாளர் வெறும் 380 வாக்குகளையே பெற முடிந்தது.

குருசுக்குப்பத்தில் கழகம் வென்றது; குபேரின் வலதுகை வீழ்ந்தது.

இப்படித் தெரிந்தும், தெரியாமலும், சுயேச்சைகளாகவும், காங்கிரஸ் வேட்பாளர்களாகவும் நின்ற குபேரின் வலது கரங்களும், இடது கரங்களும், கழகத்தின் மக்கள் சக்தியின்முன் துவண்டு போய்விட்டன.

பத்திரிகை தருமத்தைப் பற்றிப் பேசும் நாளேடுகளே! எங்கு போயிற்று குபேரின் மாபெரும் சக்தி? என்ன ஆயிற்று அந்தத் தனி மனித ஆற்றல் என்ற கேள்விபுதுவை மண்ணில் கேட்கத் துவங்கிவிட்டன.

புதுவை மண்ணில் கழகம் நின்றது பத்தொன்பது இடங்களில். வென்றது பதினைந்து இடங்களில்.

அமரர் அண்ணாவின் முகத்தில் புன்னகை பூக்கிறது. உண்மையான உழைப்பாளிகள் புதுவை சட்டமன்றத்துள் புகும் காட்சியைக் கண்டு, அண்ணாவின் உள்ளம் பூரிக்கிறது. பத்தொன்பதுக்குப் பதினைந்து வெற்றி என்பது அரசியல் வரலாற்றில் புதுமையல்லவா? அந்தப் புதுமை புதுவையில் மலர்ந்துவிட்டது.

அரசியலில் 'எல்லாமே நான்' என்ற ஆணவம் வீழ்த்தப்பட்ட புதுமை மலர்ந்துவிட்டது புதுவை மண்ணில்.

பணமே வெற்றிபெற்ற மண்ணில் உழைப்பும், உண்மையும் வெற்றி பெற்ற புதுமை மலர்ந்துவிட்டது.

ஆம்! நாளைமலரப்போகும்இன்பங்களுக்கெல்லாம் முன்னேடியாக, புதுவையில் புதுமை மலர்ந்துவிட்டது.

★



காஞ்சி 30—3—69 REGD. No. M. 8326

பொய்ம்மை இல்லை!

நிலவிலா வானமென்றும் அழகினைப் பெறுவதில்லை!
நிம்மதி இல்லாநெஞ்சம் நித்திரை கொள்வதில்லை!
நிலமதில் மூன்றின் ஆசை துறந்திட மாந்தரில்லை!
நிழலெனத் தொடரும்துன்பம் ஆசையால் விளையும்தொல்லை!
மலர்ந்திடும் பூக்களெல்லாம் மணம்பெற்றுச் சிறப்பதில்லை
மழைமேகம் மோதலாலே மலைமுகம் உடைவதில்லை
புலர்ந்திடும் பொழுதுகண்ட பனித்திரை நிலைப்பதில்லை
புத்தியின் கூர்மைதன்னைக் கத்தியும் வெல்வதில்லை!

காதலால் மேவுகின்ற துன்பமோ கொஞ்சமில்லை!
காற்றினைக் கைகளாலே பற்றுவோர் யாருமில்லை!
போதெலாம் துஞ்சிவிட்டுப் புலம்புதல் நியாயமில்லை!
பொய்,கொலை களவுசெய்வோர் மானிடப் பிறவியில்லை!
காதெலாம் கேட்டு இன்பம் துய்ப்பது மழலைச் சொல்லை!
கனிதரும் சுவையைமிஞ்சும் அன்புதான் இன்பஎல்லை!
ஆதலால் அன்புகூர்ந்து அண்ணாவின் அடிச்சுவட்டில்
அறிவுடன் நடப்பாராகில் துன்பமே என்றுமில்லை!

நல்லோரின் நெஞ்சமென்றும் நன்றியை மறப்பதில்லை!
நாவினால் சுட்டுவிட்டால் காலத்தால் மறைவதில்லை!
பொல்லாரின் பழக்கம்நேர்ந்தால் புத்திக்குச் சத்யமில்லை!
புலனைந்தை அடக்கிவிட்டால் தெய்வமே வேறுஇல்லை!
கல்லாரின் முன்னேகற்ற வித்தைகள் மெய்ப்பதில்லை!
கற்றவர் சொன்னவற்றைப் போற்றிடத் தயங்கவில்லை!
எல்லாரும் ஒன்றுசேர்ந்து அறிஞரின் நெறியில் சென்றால்
இடரென்ற சொல்லினுக்கே இடமில்லை! பொய்ம்மையில்லை!

—நா. பூமிநாதன்

'அண்ணா வாழ்க'

ஆன்ற கவியாகி அத்தனைக்கும் விருந்தாகி
தோன்று புகழ்க்கொடியோய் புண்ணியனே நீவாழ்க!
வாழ்ந்த வாழ்வெல்லாம் மக்களுக்காய் அற்பணித்தாய்
வீழ்ந்த விதமென்ன உன்நடையிற் சொல்லிடவா!
காலை மலர்ந்திருக்கும், கவிஞெளியை வீசவரும்,
பாலைச்சிரிப்பில்லை, பண்புடையாய் நீயின்றி
நாளும் கசந்ததன்றோ, நந்நேரம் பகையாகும்
நீளும் துயர்க்கடலுக் கோரெல்லை காணோம்!
செந்தா மரைமுகத்தில் சிந்தும் ஒளிகண்டு
'இந்தா எம்முறவு' என்றோர் பலருண்டு!
நந்தா விளக்கேநீ நாற்புறமும் இருள்பரப்பி
அந்தோ மறைந்தாயே, ஆற்றிடுவார் யாரிங்கு?
பண்புக் கிடமானாய் பாசக் குடியானாய்
மண்புக் கிருந்தாலும் மகிமை பேசுமன்றோ
அன்பினை அணிநீயே ஆள்வாய் அனைத்துயிரும்
துன்பச் சுமைகொடுக்க யாரே துணிந்திடுவார்?
அண்ணா அண்ணாவென் றழுவோர் நிலைகண்டு
மன்னா என்றிந்த நாவும் மடித் தொலிக்கும்.
இத்தனைபேர் இதயத்துள் குடிகொண்ட அண்ணாவுன்
புத்தகத்தை யார்தொடுவார்? பேனாவை
யார்தொடுவார்?
உத்தமனே, உண்மையனே, உள்ளமெலாம்நின்றவனே
சத்தியம் உன்பாதையிலே சரித்திரத்தை
நடத்திடுவோம்!

—அ. வ. சீனிவாசன்.

தமிழரின் பரிதி பறிபோயிற்று!

பெரியாரின் பாசறையில் வளர்ந்த சிங்கம்
பேருற்ற பெரும்புகழில் விளைந்த தங்கம்!
அறியாத இளவலில்லை அவனி யெங்கும்!
அண்ணாவை நினைத்தாலே கண்கலங்கும்!
சரியாத குணக்குன்று! மேடுபள்ளம்
சரிசெய்யச் சலியாது உழைத்த உள்ளம்
வறியோரின் வாணாளில் மறு மலர்ச்சி
வாய்த்திட வோர் வகைகண்ட தமிழுணர்ச்சி!

செம்மையிலா நடைமாற்றி இலக்கியத்தில்
செந்தமிழே நடமாடப் புதுமையாக்கித்
தெம்மாங்கும் தெருக்கூத்தும் சீர்திருத்தித்
திருந்திட்ட நாடகமாய் வெளிப்படுத்தி
எம்மருங்கும் தமிழ்வாழ! வளர்ந்தேழோங்க
எடுப்பித்த தமிழ்த்தாயின் மூத்தபிள்ளை!
சும்மாதா னென்றுமவர் இருந்ததில்லை
சுவைகூட்டும் சொற்பெருக்கால் தமிழ் வளர்த்தார்!

அமிழ்தமென இனித்தவரை அகம்புறத்தில்
ஆற்றல்மிகு தமிழ்மகனைக் கூற்றுவன்தான்
கமழ்கின்ற தமிழ்மணத்தால் காதலித்தே
களவாடிச் சென்றதனால் பேதலித்தே
தமிழன்னை கண்ணீரில் தான்மிதந்தாள்
தண்டமிழர் புண்ணாகி நீர்சொரிந்தார்!
குமிழலைசூழ் பெருங்கடலும் அரற்றிக்கண்ணீர்
கொட்டியதை யார்மறப்பர் மயப்பரோதான்!

பூமணக்கும் சோலைகள்சூழ் புவியிலெங்கும்
போய்விட்ட அண்ணனுக்கே இறங்கற்கூட்டம்!
தேமணக்குஞ் சந்தனமாய் நமைப்பிரிந்த
திருத்தலைவர் "அண்ணா"வின் புகழைச்சொல்லி
நாமணக்க வாழ்த்திடுவோம் ஏற்றிப்போற்றி
நற்றலைவர் சென்றவழி தொண்டும்ஆற்றித்
தாமணக்க முயன்றிடுவோம் தமிழர்நாட்டில்
தாங்காத துயர்மறப்போம் மனத்துள்பூட்டி!

—தமிழமுதன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.